

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில், யாழ்ப்பாணம். www.thennadu.org

வள்ளுவர் ஆண்டு 2052 கும்பம் நல்லோரை மாசித் திங்கள், 17ம் நாள் (01-03-2022) பெருஞ்சிவனிரவு வெளியீடு +94 21 221 2739


## வாழும்போது வாழ்த்துவோம்



இலங்கையின் பட்டிதொட்டியெங்கும் சைவ மணம் வீசுவதற்கு முழுமூச்சாக உழைக்கும் பொன்விழா நாயகன் சிவத்திரு. அருளானந்தம் உமாமகேஸ்வரன் அவர்களுக்கு இனிய அகவைத் திருநாள் வாழ்த்துகள்.

# ‘பெருஞ்சிவனிரவு’ இம்முறை மாசித் திங்கள் 17ம் நாள் (மார்ச் 1)

# தேய்பிறை பதினான்மைப் பிறைநாளில் கொண்டாடப்படவிருக்கிறது

பண்டு நால்வருக்கு அறம் உரைத்து அருளியநாதர்
விரும்பி உறைகின்ற திருக்கோயிலே,
வண்டுகள் பண் செய்வதும், மாமலர்ப் பொழில் மஞ்ஞைகள்
நடனமாடும் இடமுமாகிய, மாதோட்டம் எனும் திருக்கேதீச்சரம்.



சைவத் தமிழரின் கருவூலம் திருக்கேதீச்சரம்,
பண்பாட்டின் தொடக்கப்புள்ளி திருக்கேதீச்சரம்,
அரன்கழல் போற்றி அவனருளாலே,
அடையாளத்தினைக் காக்க அணிசெய்வோம் வாரீர்.

அருள்மிகு கௌரி அம்மை உடனுறை திருக்கேதீச்சரநாதர் திருக்கோயில் - மாந்தை, மன்னார்.

# திருமுதுகுன்றம் பழமலைநாதர் கோயில் திருக்குடமுழுக்கு இனிதே நடைபெற்றது!

தமிழ் நாட்டின் திருமுதுகுன்றத்தில் உள்ள பழமலைநாதர் கோயிலில் சுமார் 20 வருடங்களின் பின் திருக்குடமுழுக்கு இடம்பெற்றது. இந்த கோயிலில் கடந்த 2002-ம் வருடம் குடமுழுக்கு இடம்பெற்றது. அதன் பின்னர் இருபது ஆண்டுகள் கழித்து இறையருளால் தற்போது குடமுழுக்கு நடந்தேறியது.

கடந்த 2017-ம் வருடம் கோயிலின் திருத்த வேலைகள் தொடங்கப்பட்டு திருப்பணி நடந்து வந்தது. திருப்பணிகள் முடிவடைந்த நிலையில் புதுப்பொலிவுடன் காட்சி அளித்து திருக்குடமுழுக்கு கண்டார் பழமலை நாதர். இத்தலத்து இறைவன் மீது "பொன்செய்த மேனியினீர்" எனும் பாடலை சுந்தரர் பாடியுள்ளார்.

**"அருகரொடு புத்தரவ ரறியாவரன் மலையான்**
**மருகன்வரு மிடபக்கொடி யுடையானிட மலரார்**
**கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சியது பாடி**
**முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே."**

கருங்குழலை உடைய பெண்கள் குறிஞ்சிப் பண்ணில் முருகனைப் போற்றிப் பாடும் திருமுதுகுன்றம் என்று பொருள் வரும் விதத்தில் சம்பந்தரும் இக்கோயிலைச் சிறப்பித்துப் பதிகம் பாடியுள்ளார்.

**திருச்சிற்றம்பலம்**

# அன்புருவான கண்ணப்பரின் குருபூசை!



காப்பதோர் வில்லும் அம்பும், கையதோர் இறைச்சிப் பாரம், தோற்பெருஞ் செருப்புத் தொட்டு, தூயவாய்க் கலச மாட்டி, தீப்பெருங் கண்கள் செய்ய, குருதிநீர் ஒழுகத் தன்கண் அப்பிய கலைமலிந்த சீர் நம்பிக் கண்ணப்ப நாயனாரின் குருபூசை கடந்த தைத் திங்கள் மான்றலை (மிருகசீரிடம்) விண்மீன் தினத்தில் இடம் பெற்றது.

கல்வியின் பயனே இறைவனை அடைதல் தான் என்று அறுதியிட்ட வள்ளுவப் பெருந் தகையின் வாக்கு முற்றிலும் உண்மை யெனினும் கல்வியால் ஆணவம் உற்றுத் திரிகின்றவர் எத்தனையோ பேர். கல்வியின் பயனிலும் மேலான பயனை, துளியளவும் கல்வி அறிவின்றி, அன்பினால் பெற்றெ டுத்தவர் கலை மலிந்த கண்ணப்பர். அவரின் குருபூசை தினத்தன்று பல கோயில்களிலும் சைவ அமைப்புக்களிலும் வழிபாடுகளும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**



# உலகப் புகழ்பெற்ற ஆழித்தேர் திருவிழா!

**"ஒரு மைந்தன் தன் குலத்துக்கு உள்ளான் என்பதும் உணரான்**
**தருமம் தன் வழிச்செல்கை கடன் என்று தன் மைந்தன்**
**மருமம் தன் தேராழி உறஊர்ந்தான் மனு வேந்தன்**
**அருமந்த அரசாட்சி அரிதோ? மற்று எளிதோ தான்"**

என்று தெய்வச் சேக்கிழார் இயம்பிப் போந்த நறுந்தமிழ் வரிகளினூடு ஆயுங்கால், தெய்வத் திருஆரூரின் செழுஞ்சிறப்பு தெள்ளத் தெளிவாக மனதில் படர்ந்து செல்லும். ஒற்றைப் பசுவிற்காய் நீதி வழங்க முனைந்து, அந்நாட்டின் செங்கோல் மன்னன், தன் ஒற்றை மகனைத் தேரால் ஏற்றிக் கொன்ற நீதியின் ஊரல்லவா அது. தேராழி உற ஊர்ந்தான் என்று சேக்கிழார் பெருமானார் செப்பிய அந்த வார்த்தைகள் இன்றும் தொடர்கின்றன. அன்று தேரில் ஆள ஊர்ந்தான் நாட்டிற்கு நீதி வழங்குவோன். இன்று உலகுக்கே நீதி வழங்கும் மழவிடை அண்ணல் உலகப் பெரும் ஆழித்தேரில் அவ்வூரின் வீதி வழியாக ஊருகின்றார். அந்தத் திருக்காட்சி வருகின்ற பங்குனித் திங்கள் 1ம் நாள் 15.03.2022 பெரும் பொலிவாக இடம்பெறவுள்ளது.

**"முன்னம் அவனுடைய நாமங் கேட்டாள்**
**மூர்த்தி யவனிருக்கும் வண்ணங் கேட்டாள்**
**பின்னை யவனுடைய ஆரூர் கேட்டாள்**
**பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்**
**அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்**
**அகன்றாள் அகலிடத்தார் ஆசா ரத்தைத்**
**தன்னை மறந்தாள்தன் நாமங் கெட்டாள்**
**தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே"**

என்று கையில் உழவாரத்தையும், நாவில் நமச்சிவாயத்தையும், மனதில் ஈசனது திருவடிகளையும் ஏந்தித் தொண்டு செய்த பெருமகனார் கூறிப் போயுள்ளார். தன் தோழனின் காதலுக்காகத் தம்பிரான் கால்பதித்து நடந்த தெருவல்லவா அது. அவ்விறை வனையும், அவனுடைய ஆழித்தேர் திருவிழாவையும், வழிபட்டு உய்வோமாக.

**திருச்சிற்றம்பலம்**

# சங்கானையில் வாரண வைரவர் சூழ் சங்கைநாதருக்கு தென்னாடு மடத்தினால் செந்தமிழில் குடமுழுக்கு

**"பங்கப்பழனத் துழுமுழவர் பலவின்கனியைப் பறித்ததென்று**
**சங்கிட்டெறியக் குரங்கிளநீர் தனைக்கொண் டெறியுந் தமிழ்நாடா**
**கொங்கைக் கமராபதி யளித்த கோவே ராசகுல திலகா**
**வெங்கட் பிறைக்குங் கரும்பிறைக்கும் மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே."**

என்ற புகழேந்திப் புலவரின் தனிப்பாடல் தமிழ்நாட்டின் சிறப்பைச் சொல்லும் போது சங்கின் சிறப்பையும் கூடவே சொல்லிப் போகின்றது. ஒரு நாட்டின் சிறப்பு நீர்வளம், நிலவளம், கனியவளம், உணவுவளம் எனும் நான்கும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பது தான். அப்படிப்பட்ட இடத்தில் சங்கானது விளைந்து வாழும். சங்கு நிறை சங்கானையில் அமர்ந்து அருள் பாலிக்கும் சங்கை நாதரின் திருக்குட முழுக்கானது, கீழறை வருடம் (16.02.2022) புதன் கிழமை கதிரவன் வடதிசை நோக்கிய பயணத்தின் மாசித் திங்கள் நிறைமதி நாளில் வெகு சிறப்பாக இடம் பெற்றது.

தென்னாடு சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபை ஆகியவற்றோடு இணைந்து சங்கானை வாழ் மக்கள் இவ்விழாவை முன்னெடுத்தனர். கிட்டத்தட்ட 30 வருடங்களுக்கும் மேலான பழைமையுடைய இக்கோயில் மீள் புனரமைக்கப்பட்டு வாரண வைரவர், விநாயகர், முருகன் சூழ சங்கைநாதர் எழுந்தருளினார்.

பல அடியார்கள் இவ்விழாவில் கலந்து எல்லாம் வல்ல எம்பெருமானின் திருவருளைப் பெற்றுய்தனர். குருநாதர் சிவத்திரு உமையொரு சிவம் நிகரிலரசு, சிவத்திரு உயிரொளி சிவம் சிவநாதன், சிவத்திரு அவிரொளி சிவம் உமைகாந்தன், சிவத்திரு பா. சிவமாதவன் ஆகியோர் செந்தமிழ் அருட்சுனைஞர்களாகக் கலந்து கொண்டு இவ்விழாவை சிறப்புற நடாத்தினர். இனிதே இந்நிகழ்வு திருவருளுடன் நடந்தேறியது

**திருச்சிற்றம்பலம்**













# சிவப்பேறு தரும் பெருஞ்சிவனிரவு

சைவம் தன்னுள்ளே பலநூறு விரதங்களை அடையாளப்படுத்தி வைத்திருக்கின்றது. அறிவித்தால் அறியும் ஆற்றல் பெற்ற பசுவாகிய உயிர்கள், இறைவனை நெருங்கிச் செல்வதற்கான மார்க்கங்களாக அவை விளங்குகின்றன. ஒவ்வொரு விரதமும் ஒவ்வொரு விதமான ஆற்றலையும் அனுபவத்தையும் எமக்குத் தந்தாலும் மாசித் திங்களில் நாம் கைக்கொள்ளும் 'மகா சிவராத்திரி' என்று போற்றப்படும் "பெருஞ்சிவனிரவு" விரதங்களுக்கு எல்லாம் தலையாய விரதமாகி, சிவனின் அருகில் நித்திய ஆனந்தம் பெற்றிருக்கும் நிலையாகிய சிவத்தோடு எம்மை இணைக்கும் சிவப்பேறு தரும் உன்னத விரதமாகிறது. உலகம் எங்கும் பரந்து வாழுகின்ற சைவர்கள் இந்த விரதத்தின் மகிமையை உணர்ந்து அகத்திலும் புறத்திலும் சிவத்தையே நினைந்து உருகி வழிபட்டு உய்வார்கள்.

சிவனிரவு விரதம் குறித்தான பல வரலாறுகளும், புராணக் கதைகளும் காட்சிகளும் எமக்குக் கற்பிக்கப்படுகின்றது. பிரம்மாவும் விட்டுணுவும் பரம்பொருளாகிய சிவனின் அடிமுடிகாணாமல் தம் அகந்தை அழிந்த தினமாகவும், உலகப்பிரளயத்தின் போது, உயிர்கள் அனைத்தும் எதிலிருந்து தோன்றினவோ அந்தச் சிவனிடத்திலேயே ஒடுங்கிய போது சத்தியாகிய அம்பிகை விரதமிருந்து மீண்டும் உலகங்களையும் உயிர்களையும் படைக்கும்படி விண்ணப்பித்த புண்ணிய விரதகாலமாகவும், வேடனொருவன் புலிக்கு அஞ்சி வில்வமரத்தின் மேலிருந்து தூக்கம் இழந்து வில்வத்தால் அவனை அறியாமலே சிவ வழிபாடு செய்த நாளாகவும் இந்த சிவனிரவு விரதத்தை அடையாளப்படுத்து கின்றோம்.

எது எவ்வாறாக இருந்தாலும் மிக நீண்டவரலாற்றைக் கொண்டுள்ள இச் சிவனிரவு விரதத்தின் மகத்துவம் தேவர்களாலும் கைக்கொள்ளப்பட்டது என்பதும் அவற்றை எல்லாம் தாண்டி இவ்விரதத்தை அறிந்தோ அறியாமலோ கைக்கொண்டால் அது கற்ற அறிவு அற்ற வேடனாயினும் சிவப்பேறு பெறலாம் என்பதையும் எமக்கு உள்ளுணர்த்தி நிற்கின்றது. பசித்திருந்து, தனித்திருந்து, விழித்திருந்து நாம் பெறப்போகும் பதவி என்பது சிவத்தோடு எம்மைச் சேர்ப்பிக்கும் சிவலோகப்பதவியே என்பதை நாம் அறிவோம்!

பெருஞ்சிவனிரவு எனப்படுகின்ற இந்த சிவனிரவு விரதம் மாசித்திங்கள், தேய்பிறையில் வரும் பதினான்காவது நாள் (சதுர்த்தசி திதி) அன்று நோற்கப்படுவது வழமை. அதாவது தேய்பிறை பிறைத்தோற்ற (பிரதோச) தினத்திற்கு இன்னும் தெளிவாக சொல்ல வேண்டுமாயின், தேய்பிறையில் இருந்து பதின்மூன்றாம் நாளுக்கு அடுத்த நாள் நோற்கப்படுவது. எதற்காக இவ்விரதத்தின் முதன் நாளையும் இங்கு நாம் அழுத்தமாக குறிப்பிடுகின்றோம் என்பதில் பொருள் பொதிந்திருக்கின்றது. பொதுவாக மேலத்தேயத்தவரும் 'பதின்மூன்று' எனும் எண்ணை அதிகம் விரும்புவதில்லை. இது மூடப் பழக்கவழக்கம் என்ற சிந்தனையைத் தாண்டி, சந்திரனுக்கு சார்பான பதின்மூன்றாவது நாளில் வானில் இருந்து அதிகமான கதிர்ப்புத் தாக்கங்கள் பூமியை நோக்கி வருவதாகவும், அந்த வேளையில் அதாவது பிரதோச காலத்தில் ஆகம முறைப்படி அமைக்கப்பட்ட ஆலயத்தில் அமர்ந்து வழிபடும்போது, அக்கதிர்ப்புக்களின் தாக்கத்தால் எம் மனநிலைகள் குழப்பமடையாது மனத்தை ஒரு நிலைப்படுத்தவும் இவ்வழிபாடுகள் உதவுகின்றன எனலாம்.

முழு நிலவு தோன்றும் பூரணை காலத்தை ஒட்டிய நாட்களிலும் மறைமதி காலமாகிய அமாவாசையை அண்டிய காலங்களிலும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களின் செயலிலும், மனத்திலும் அதிக மாற்றங்கள் உண்டாவதை விஞ்ஞானமும் மருத்துவமும் ஏற்றுக்கொண்டுள்ளமையை நாம் ஒப்பிட்டு பார்க்க வேண்டும். எம் முன்னோர்களின் ஒவ்வொரு நடைமுறைக்குப் பின்னாலும் பல்லாயிரம் அனுபவங்களும் அர்த்தங்களும் மறைந்துள்ளமையை நாம் காண்கின்றோம்.

பிறைத்தோற்ற வழிபாடு என்பது, (பிரதோச வழிபாடு) ஒடுங்கும் கால வழிபாடு எனவும் சுட்டப்படுகின்றது. எமது தீவினைகள் சிவனிடத்தில் ஒடுங்குதலை அது குறிக்கின்றது. பாற்கடலை தேவர்களும் அசுரர்களும் கடைந்தபோது உண்டாகிய ஆலகால விடத்தை இறைவன் தன் கண்டத்தில் ஏற்று, அமுதத்தை வழங்கிய நிகழ்வின் குறிகாட்டிகளாக, எம்முள்ளே எழும் குண்டலினியின் ஆற்றலை ஒப்பிட்டுப் பார்க்கும் போதும் அளப்பெரும் கருத்துக்களை மறை பொருளாக எம்முன்னோர்கள் எமக்கு அளித்திருப்பதினை உணரலாம். எனவே தான் முன்னர் சிவத்தினுள் ஒடுங்கிய எம் முன்னவர்களுக்கு இறைவன் சிவப்பேறு அளித்ததற்கு நன்றிக் கடன் செலுத்துவதாகவும், இனியும் சிவத்துடன் எம் உயிர்களையும் ஒடுக்க விண்ணப்பம் செய்யும் வகையிலுமே, சிவனிரவு விரதம் பிறைத்தோற்ற (பிரதோச) நாளுக்கு மறுநாளாகக் கொள்ளப்படுகின்றது. பிறந்த எல்லா உயிர்களதும் ஒரே நோக்கமாகப் பிறப்பில்லா பேரானந்த நிலையை அடைவதே இருக்க வேண்டும். மாயையில் சிக்குண்டு உலகப் பொருட்கள் மீது பற்றுக் கொண்டும், சிற்றின்ப அனுபவங்கள் மீது சிரத்தை கொண்டும் இருப்பது முறையாகாது. எனவே தான் இறைநிலை அடைய இறைவனை ஆன்மாக்கள் சிக்கெனப் பிடிப்பதற்காக இறைவனே தன் நிலையில் இருந்து இறங்கி வந்து விரதங்கள் வாயிலாகவும், நோன்புகள் வாயிலாகவும் உயிர்களுக்கு அருளுகின்றான். அதுவே இறைவனின் உயிர்கள் மீதான பெருங்கருணையும் ஆகின்றது.

**"வளர்கின்ற நின்கருணைக் கையில்**
**வாங்கவும் நீங்கி இப்பால்**
**மிளிர்கின்ற என்னை விடுதிகண்டாய்"** என்றும்,

**"மறுத்தனன் யான் உன் அருள்**
**அறியாமையின் என் மணியே**
**வெறுத்து என்னை நீ விட்டிடுதிகண்டாய்"** என்றும் மாணிக்கவாசகர் சிவனை நினைந்து ஓடினாலும் உருகிப்பாடுவார். உலக ஓட்டத்திலே உயிர்கள் ஓடினாலும் கூட, அவற்றைத் தடுத்து சிவன் தன்பால் ஈர்க்க வேண்டும் என்பதை மணிவாசகர் சிவனுக்கு விண்ணப்பமாக முன்வைத்து அமைகின்றார். எனவே தான், சிவனிரவும் இந்த விண்ணப்பத்துக்கு இரங்கிய இறைவனால், தன்னை உயிர்கள் வந்தடைய அருளியது என்பதை சமயப் பெரியவர்கள் சான்று சொல்வார்கள். 'சிவ சிவ என்றிடச் சிவகதி தானே' என்பது திருமந்திரம், சிவனிரவு விரதம் முழுவதும், உணவை நீக்கி, உள்ளன்போடு 'சிவ சிவ' எனத் தியானித்து மனதை ஒருமுகப்படுத்துபவர்களுக்கு உள்ளொளி பெருகுவதோடு சிவப்பேறும் கிடைக்கின்றது.



சிவ.செந்தமிழாதன்
(ஜீவா.ஷஜீவன்)

எம்மில் பலர் சிவனிரவைக் கொண்டாடுதல் என்றும், அதை விழா என்றும் தவறான புரிதலில் வழிதவறி ஏதேதோ செய்வதை தற்காலத்தில் காண்கின்றோம். விதவிதமான உணவுப் பண்டங்களை இரவிரவாக உண்பதும், நித்திரையை தவிர்ப்பதற்காக சினிமாப்படங்களை பார்ப்பதும், நண்பர்கள் அயலவருடன் அரட்டைஅடிப்பதும், இன்னும் சிலர் இரவிரவாகப் பயணப்படுவதையும் கண்டு வருந்துகின்றோம். சிவனிரவு என்பது 'விழா' அல்ல அது 'விரதம்', அமைதியும், தியானமும் இறை வழிபாடுமே அதன் அடிநாதமாய் அமையவேண்டும் என்பதையும் எம்மவர்கள் உணர வேண்டும்.

சிவகதிதரவல்ல சிவனிரவு நோன்பை, சிவாலயங்களுக்குச் சென்று அங்கு நடைபெறும் இரவுப் பூசைகளை கண்டு இன்பம் பெருகி வழிபடலாம். இயலாதவர்கள் வீட்டில் இருந்தே சிந்தை புறம் போகாமல் சிவனை நினைத்து முழுவதும் உள்ளார்ந்தமாக தியானம் செய்யலாம்.

**"தீங்குஉறு மாயை சேரா**
**வகைவினை திரிவி தத் தான்**
**நீங்கிட நீங்கா மூல**
**நிறை இருள் இரிய நேயத்து**
**இங்கு உணர் வசத்தடங்கி**
**உளத்துளி இன்பு ஒடுங்க நேரே**
**தூங்குவர் தாங்கவேத்**
**தொன்மையில் துகள் இலோரே"** என்கிறார் உமாபதி சிவாச்சாரியார். அதாவது தீங்கு தரும் மாயையால் நேரும் பிறவிப் பிணி என்பது சிவத்தை அணைந்தவர்களுக்கு இல்லை என்றும் மூவினைகளும் நீங்கி, மலங்களும் அகன்று, உள்ளம் எங்கும்பேரானந்த வெள்ளமே ஒடுங்க அவர் சிவத்தினுள் ஒடுங்குவர் என்பதாகும். எனவே பேரானந்தப் பெருவாழ்வு எம்மை வந்து சேர, சிவகதிஅடைய சிவனிரவு நன்னாளில் விரதம் கொண்டு உய்வோமாக!

# போற்றித் திருத்தாண்டகம்
# திருவாரூர்

கற்றவர்க ளுண்ணுங் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லுங் கதியே போற்றி
அற்றவர்கட் காரமுத மானாய் போற்றி
அல்லலறுத் தடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவ ரொப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

வங்கமலி கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மதயானை யீருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித் தோலாடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறஞ் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

மலையான் மடந்தை மணாளா போற்றி
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் ணுடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவே லேந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலு மானாய் போற்றி
சிலையாலன் றெயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கு மானாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க் குண்மையனே போற்றி போற்றி
உலகுக் கொருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியங் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளி லாட லுகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி


சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத் தயனோடு மாலுங் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி
குரைகழலாற் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க் கரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்க மானாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

உள்ளமா யுள்ளத்தே நின்றாய் போற்றி
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையே றேறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்குந் தேவே போற்றி
திருமாலுக் காழி யளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை யாண்டாய் போற்றி
சங்கொத்த நீற்றெஞ் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி

பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி
பெண்ணுருவோ டாணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க் காற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க் கரசே போற்றி
யன்றரக்கன் ஐந்நான்கு தோளுந் தாளுஞ்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி



# சிவபுராணம்
## சிவனது அனாதி முறைமையான பழைமை
## (திருப்பெருந்துறையில் அருளியது)



திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன், அநேகன், இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன்அருளாலே அவன்தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல்இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண் இறந்து எல்லை இலாதானே, நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன், புகழும்ஆறு ஒன்று அறியேன்,

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர, சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே! உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா, விமலா, விடைப்பாகா, வேதங்கள்
"ஐயா!" எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே,

வெய்யாய் தணியாய் இயமானன் ஆம்விமலா,
பொய்யாயின எல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே,
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய், காப்பாய், அழிப்பாய், அருள்தருவாய்,
போக்குவாய், என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம், மனம், கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான், வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம், பாவம், என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா, உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலன்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காஅட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த தயாவான தத்துவனே,
மாசற்ற சோதி, மலர்ந்த மலர்ச்சுடரே,
தேசனே, தேனார் அமுதே, சிவபுரனே,
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே,
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே, அளவிலாப் பெம்மானே,
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே,
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே,
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே, யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே, தோன்றாப் பெருமையனே,
ஆதியனே, அந்தம் நடுவாகி அல்லானே,
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே,
கூர்த்த மெய்ஞ் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தின்

நோக்கரிய நோக்கே, நுணுக்கரிய நுண்ணுணர்வே,
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே,
காக்கும் எம்காவலனே, காண்பரிய பேரொளியே,
ஆற்றின்ப வெள்ளமே, அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே, தேற்றத் தெளிவே, என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே, உடையானே,
வேற்று விகார விடக் குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே 'ஓ' என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து, வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே,
நள்ளிருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே,
தில்லையுள் கூத்தனே, தென்பாண்டி நாட்டானே,

அல்லல் பிறவி அறுப்பானே,ஹஓ' என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர், சிவபுரத்தின் உள்ளார், சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

# திருகோணமலை சிவன் கோயிலின் ஆறாவது திருக்குடமுழுக்கு





திருகோணமலை மண்ணின் நீண்ட கால வரலாற்றைக் கொண்ட அருள்மிகு விசாலாட்சியம்மை உடனாய அருள்மிகு விசுவநாத சுவாமி கோயிலின் புதிய ஏழுநிலை இராசகோபுரம் அமைக்கப்பட்டு, தை மாதம் 27 ஆம் திகதி வியாழக்கிழமை 9.28 மணி முதல் 11.06 மணி வரையிலான நற்பொழுதினிலே திருப்பெருகு திருக்குடமுழுக்கு விழாவானது 22 வருடங்களின் பின்னர் நடைபெற்றது.

திருகோணமலையில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க நூற்றாண்டுகளைக் கடந்த கோயில்களில் செங்கற்பண்ணை சிவன் கோயிலும் ஒன்றாகும். இந்த கோயிலின் வரலாறு, இன்று உள்ள எழுத்து மூல ஆவணங்கள் அடிப்படையில் 1815ஆம் ஆண்டிலும், எழுத்து மூல ஆவணங்களைக் கடந்த வரலாற்று சுவடுகளின் அடிப்படையில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னரான காலப்பகுதியைச் சேர்ந்ததாகவும்



உள்ளது. திருகோணமலை மண்ணின் நீண்ட கால தமிழர் வரலாற்றுக்கு சுவடாக இக்கோயில் விளங்கி வந்துள்ளமை வரலாற்று ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திரு. சண்முகநாதன் விஜயநீதன் அவர்களால் சேகரிக்கப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்ட ஆவணங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் திரு. சிவகுமாரன் ஹயக்கிரிவனால் இந்த கட்டுரை வரையப்பட்டுள்ளது.

போத்துக்கேயர் வருகையின் போது திருகோணமலையில் அழிக்கப்பட்ட சைவ கோயில்களில் ஒன்றாக, செங்கற் பண்ணையில் இருந்த தான்தோன்றி இலிங்கத்துடன் கூடிய கற் கோயிலும் இனங்காணப்பட்டுள்ளது. இதுவே இன்றைய அருள்மிகு விசாலாட்சியம்மை உடனாய அருள்மிகு விசுவநாத சுவாமி கோயில் ஆகும். இதன் அடிப்படையில் சிவன் கோயில் திருகோணமலையில் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னரே நிலைபெற்று இருந்தது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வரலாற்று ஆவணங்களின் அடிப்படையில் 1815 ஆம் ஆண்டில் கோயிலிற்கு காசியில் இருந்து வருகை தந்திருந்த சன்னியாசி ஒருவர் தான் கொண்டு வந்திருந்த உடையவர் இலிங்கத்தை செக்கடி மடாலயத்தில் (இன்றைய திருகோணமலை மத்திய வீதி) திருநிலைப்படுத்தி இருந்தார்.

1829 ஆம் ஆண்டளவில் செக்கடி தெருவிலிருந்த காசி சிவலிங்கம், சொர்ணலிங்கம் முதலியாரால் செங்கற்பண்ணை பகுதியில் இருந்த தனது காணி 11 ஏக்கரை மையப்படுத்தி, செங்கற்பண்ணை வா ழ் சைவ மக்களின் உதவியுடன், இந்தியக் கலைஞர்களைக் கொண்டு 1829 ஆம் ஆண்டளவில் புதிய கோயிலைக் கட்டி முடித்து, குடமுழுக்கு செய்வித்தார். இதுவே சிவன் ஆலயத்தின் எழுத்து மூல ஆவணங்களின் அடிப்படையிலான "முதலாவது குடமுழுக்கு" ஆகும். சொர்ணலிங்கம் முதலியாருக்கு பின்னர் அவரது மகனான அருணாசலம்பிள்ளை முகாமையாளராக இருந்து ஆலயத்தை நிர்வகித்து வந்தார். இவரின் இறப்பின் பின்னர் கோயிலின் நிர்வாகம் ஓர் அறக்கட்டளை உறுதி மூலம் சௌந்தரராஜ குருக்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தது.

1872 ஆம் ஆண்டில் கோயில் நிர்வாகத்தைக் கொண்டு செல்ல 15 பேர் கொண்ட நிர்வாக குழு உருவாக்கப்பட்டு, நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது. இதனை முத்துக்குமார் அவர்கள் முகாமையாளராக இருந்து நிர்வகித்தார். 1894ஆம் ஆண்டில் திருகோணமலை வாழ் சைவ மக்களின் ஒத்துழைப்புடன், சிவன் கோயிலில் விசாலாட்சியம்மைக்கு ஒரு சன்னதி அமைக்கப்பட்டு, அம்மை திருநிலைப்படுத் தப்பட்டதுடன் "இரண்டாவது குடமுழுக்கு" 65 ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்றது. 1909ஆம் ஆண்டு நடேசருக்கு சன்னதி அமைக்கப்பட்டு, தில்லையிலிருந்து கொண்டு வரப்பட்ட ஐம்பொன் நடேசர் திருநிலைப்படுத்தப்பட்டதுடன், "மூன்றாவது குடமுழுக்கு" 15 வருடங்களின் பின்னர் நடைபெற்றது. இவ்வாண்டில் இருந்து இன்றுவரை சிவன் கோயிலில் வருடம் இரண்டு முறை "ஆனி திருவிழாவிற்கும் மார்கழி திருவெம்பாவை திருவாதிரைக்கும் தேரோட்டம்" இடம்பெற்று வருகின்றது. இவ்வாறு சென்ற கோயில் நிர்வாகம் 1925ஆம் ஆண்டு திருகோணமலை உதவி அரசாங்க அதிபரினால் அமைக்கப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் கடித இலக்கம் 340/N346, 21/10/1925 மூலம் மூன்று ஆணையாளர்கள் மு. சோமசுந்தரம், வ.சீவரட்ணம், பொன்னம்பலம் ஆகியோர் நியமிக்கப்பட்டு கோயில் நிர்வாகம் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் ஆறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும் எந்த ஒரு முடிவும் ஆணைக்குழுவினால் எட்டப்படவில்லை.

இவ்வாறான அரச ஆணைக்குழுக்களின் பதிவுகளால், கோயில் வரலாறு கற்களில் பதிவு செய்யப்பட்டது போன்று



நிலை பெற்றுள்ளது. இரண்டாம் உலகப் போர் இடம்பெற்ற காலத்தில் 1942ஆம் ஆண்டு சித்திரை முதல் 1944ஆம் ஆண்டு ஆனி மாதம் வரை கோயிலில் நாட்பூசை இன்றி கோயில் பாழடைந்து இருந்தது. 1945 ஆம் ஆண்டு மக்கள் திருகோணமலை உதவி அரசாங்க அதிபரிடம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் ஆணைக்குழு அமைக்கப்பட்டு விசாரணை இடம்பெற்றது. 1946 ஆம் ஆண்டு உதவி அரசாங்க அதிபரால் பரிந்துரைகள் வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒரு இடைக்கால நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு கோயில் குடமுழுக்கு நடத்த ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என கூறப்பட்டிருந்தது.

சைவ மக்களின் உதவியுடன் பிள்ளையார், முருகன், சண்டேசுவரர், ஒன்பான்கோள்கள் , சூரியன், நாகதம்பிரான், வைரவர் சன்னதிகள் கட்டப்பட்டு அருட்திருமேனிகள் திருநிலைப்படுத்தப்பட்டு , 48 வருடங்களின் பின்னர் 8ம் திகதி ஆடி மாதம் 1957ஆம் ஆண்டு "நான்காவது குடமுழுக்கு" இடம்பெற்றது. குடமுழுக்குக்கு முன்னர் 1957ஆம் ஆண்டு ஆனி மாதம் 8ம் திகதி 17 உறுப்பினர்களை கொண்ட புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது. இதன் தலைவராக இராமலிங்கம் தலைமை தாங்கினார். இந்த ஆணைக்குழுவின் அறிக்கைகளின் படி திருகோணமலையின் பழமைமிக்க, நில புலங்களை கொண்ட கோயிலாக சிவன் கோயில் விளங்கியுள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

27.07.1883 இல் இடம்பெற்ற இனக்கலவரத்தில் சிவன் கோயிலின் நூற்றாண்டு கால பழைமை வாய்ந்த கோயில் தேர் மற்றும் கோயில் அலுவலகம் எரிக்கப்பட்டது. 1990ஆம் ஆண்டு ஆனி மாதம் மீண்டும் எறிகணைத் தாக்குதலில் கோயில் சேதமுற்றது. 1983ம் ஆண்டு கலவரத்தின்போது சேதமுற்ற கோயில் கருவறையில் இருந்த சிவலிங்கம் அகற்றப்பட்டு, மீண்டுமோர் பாணலிங்கம் கொண்டு வரப்பட்டு பதிட்டை செய்யப்பட்டது. கோயிலில் முன்னர் இருந்த சிவலிங்கம் தற்சமயம் கருவறைக்கு பின்னால் வைக்கப் பட்டுள்ளது. பாணலிங்கம் ஆனது தான்தோன்றி இலிங்கத்திற்கு ஒப்பானது ஆகும். இலிங்கம் 18 அங்குலமும்,




ஆவுடை 24 அங்குலமும் கொண்ட கண்ணாடி போன்ற பளபளப்பான பலவித இலக்கணங்களின் அடிப்படையில் அமைக்கப் பெற்ற இலிங்கமே தற்சமயம் கோயில் கருவறையில் பதிட்டை செய்யப்பட்டுள்ளது.

பின்னர் 24.06.1999ஆம் ஆண்டு சந்திரனுக்கு தனி சன்னதியும், ஆடல் கணபதி, தென்முகப் பரமன், அண்ணாமலையார், பிரம்மா, துர்க்கை ஆகிய சன்னதிகள் அமைக்கப்பட்டு அருள்திருமேனிகள் பதிட்டை செய்யப்பட்டு, "ஐந்தாவது குடமுழுக்கு" 42 ஆண்டுகளின் பின்னர் இனிதே இடம்பெற்றது. திருகோணமலையில் நீண்ட கால வரலாற்றை கொண்ட, திருகோணமலை மாவட்டம் முழுவதும் பரந்த அளவில் நில புலங்களை கொண்ட ஆலயங்களில் சிவன் ஆலயம் முக்கியமான ஒன்றாகும் என்பதில் மாற்று கருத்தில்லை.


**வரலாற்று ஆவணப்படுத்தல்**
**திரு.சண்முகநாதன் விஜயநீதன்**
**எழுத்தாக்கம்**
**திரு. சிவகுமாரன் ஹயக்கிரிவன்**

தென்னாடு
www.thennadu.org

சிவத்திரு. சிவ. செந்தமிழாதன்,
ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
0715588737, aathan@thennadu.org



# விரதம் கொள்வோம் இளையோரே!

தலையங்கத்தைப் பார்த்த உடனேயே சில வித்தியாசமான சிந்தனைகள் உங்கள் மனங்களில் திரையோடுவதை உணரமுடிகின்றது. இளையவர்களுக்கு ஏன் விரதங்கள்? விரதங்கள் வயது முதிர்ந்தவர்களுக்கு தானே ஒதுக்கியளிக்கப்பட்டவை? போன்ற வேறுபாடான சிந்தனைப் பதிப்புக்களை எம் மனங்களில் நாம் பதித்துவைத்துள்ளோம். ஆனால், விரதத்தின் மேம்பாடுகளை அறிந்தோமேயானால் அதன் முக்கியத்துவம் இளையவர்களுக்கு எப்படி பயனுறுதி வாய்ந்தது என்பதை நாம் உணரலாம். ஆதிகாலத்தில் இயற்கையாகவே உணவு கிடைக்காமல் மனிதன் பசித்திருந்ததில் இருந்து உணவு மிகையாக உள்ள போதும் கூட பசித்திருந்தது மனதை ஒருநிலைபடுத்த முயற்சி செய்வது வரையிலான நீண்ட வரலாற்றைக் கொண்டது. இந்த விரத நடைமுறை. எனினும் வெறுமனமே உணவை விடுவதோ, கோயிலுக்கு செல்வதோ விரதமாகாது என்ற எண்ணக்கருவை நாம் புரிந்து கொண்டால் இளையவர்களுக்கு விரதத்தின் அவசியத்தை எம்மால் இலகுவாக புரிந்துகொள்ளலாம்.

மனத்தின் உறுதித் தன்மையை சுயபரிசோதனை செய்வதே விரதத்தின் மிகப்பிரதானமான நோக்கம் ஆகும். ஆன்மஈடேற்றம் பெறுவதற்கு மனதின் உறுதித் தன்மையே பெரும் செல்வாக்குச் செலுத்தும். அந்த உறுதித் தன்மை படிப்படியாக வளர்வதற்கு மனதை ஒருநிலைப்படுத்தும் விரதங்களால் சாத்தியமாகிறது. இன்று நம் செல்நெறியில் இருந்து தவறிப் பயணிக்கும் இளைய சமுதாயத்தினரின் பாதை சரிவர அமைய வேண்டுமாயின் விரதங்கள் மூலமாகவே அவற்றை சாத்தியமாக்கிக் கொள்ளலாம். இவற்றை தாண்டிய பார்வையாக நவீன ஆய்வாளர்கள் விரதங்களை மருத்துவம் சார்ந்த பயனையும் தரவல்லது என்று சொல்கின்றார்கள். ஆனால் மருத்துவம் சார்ந்த பயன்களை விரதங்கள் வழங்கும் என்பதை எம் முன்னவர்களும் அறிந்திருந்தனர்.

**“ஒருவேளை உண்பான் யோகி**
**இருவெளை உண்பான் போகி**
**மூவேளை உண்பான் ரோகி**
**நான்கு வேளை உண்பான் பாவி”**

என்று நீதிவெண்பா குறிப்பிடுகிறது. எனவே உணவை விடுத்து மோனத்திருப்பவன் யோகிக்கும் மேலே சென்று இறைவனுக்கு அருகில் செல்கிறான் என்பதே பொருளாகிறது. இளையவர்கள் விரதமிருப்பதை நாகரிகம் இல்லை என்று இன்று கைவிடுவது காலகாலமாக எம் முன்னோர்கள் ஏற்படுத்தித் தந்த ஒரு யோக நிலையை இழப்பதற்கு ஒப்பானது.

விரதமானது உடலுக்கு உயர்ந்த சிகிச்சைமுறை என்கிறது சித்த மருத்துவம். இதையே ‘பத்தியம்’ என்றும் மருத்துவம் சார்ந்து பெயரிட்டு அழைக்கின்றது. உடலில் உண்டாகும் பெரும்பான்மை நோய்கள் உடலில் தேங்கும் கழிவுகளாலேயே ஏற்படுகின்றது. சிறுநீர், மலம் போன்ற இயல்பாக வெளியேறும் கழிவுகளின் தேக்கமும் நோய்களுக்கு பிரதான காரணமாகின்றது. விரதம் இருப்பதன் வாயிலாக இவற்றுக்கு மேலாக இரத்தக்குழாய்கள், இதயம் ,நுரையீரல் போன்றவையும் தூய்மையடையும். உணவு உண்ணாத போது உடல் தன் உறுப்புக்களுக்கு ஓய்வு கொடுக்கிறது. ஓய்வில் உடல் உறுப்புக்கள் தம்மைத் தாமே சுத்தப்படுத்திக் கொள்கின்றன. இளைய பிராயத்தில் இருந்தே சரியான விரத நடைமுறைகளோடு விரதம் இருந்து வந்தால் நோய் நொடிகள் இல்லாது வாழும் ஆற்றலையும், சிவத்தின் மீது மனத்தை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சியின் மூலம் தாம் அடைய எதிர்பார்க்கும் நோக்குகள் மீதும் இலக்குகள் மீதும் மனதை ஒரு நிலைப்படுத்தும் ஆற்றலையும் வளர்த்துக் கொள்ளலாம்.

உடலில் உள்ள கெட்ட கொழுப்புக்களைக் குறைத்து உடலுக்குத் தேவையான கொழுப்பை அதிகரிக்கும் உடலியல் செயன்முறை விரதத்தின் ஊடாக விருத்திபெறுகின்றது. இதனால் உடல் தசைக் கட்டமைப்பு கட்டுக்கோப்பாக அழகாக மாறுபடுவதுடன் உடல் பருமன் நீக்கி உடல் எடை குறையவும் தூண்டும். இது மனத்தூய்மையையும், மனவலிமையையும் ஏற்படுத்தும் ஊக்கியாகவும் உதவுகின்றது.

விரதம் வயதானவர்களுக்கானது என்கின்ற மனநிலை எம்மிடையே மாற்றம் பெற்றாலன்றி அதன் ஆற்றலின் முழு நன்மையும் எம் வருங்கால சந்ததி அனுபவிக்க முடியாது போகும் என்பதே உண்மையாகும். இளையவர்களுக்கு இசுலாம் மார்க்கத்தில் நோன்பின் அவசியம் சொல்லிக்கொடுக்கப்பட்டு அது இறைபணியாக அடையாளப்படுத்தப்படுவதைப் போல, சைவசமயத்திலும் விரதங்கள் இறைபணி என்ற பெயருடன் இணைந்து இளைய பிள்ளைகளுக்கு சொல்லிக்கொடுக்கப்பட வேண்டும்.

சைவசமயப் பெரியவர்களும் , சிவமடங்களும் ஒரு நோயற்ற இளையதலைமுறையை இந்த மண்ணில் கட்டியெழுப்ப , தம்மாலான முயற்சிகளை எடுக்க முன்வர வேண்டும். அனைத்திற்கும் மேலாக இளையவர் மனங்கள் மாற வேண்டும் !

திருச்சிற்றம்பலம்

தென்னாடு
www.thennadu.org

சிவத்திரு.யாழவன் சிவவேதன்,
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
021 222 9722, sivavethan@thennadu.org



# காமன் தன் பெருவாழ்வோ!

மாசித்திங்கள் என்றதும் சிலருக்குப் பெருஞ்சிவனிரவு நினைவுக்கு வரலாம். சிலருக்கு மாசிமகம் நினைவுக்கு வரலாம், இன்னும் சிலருக்கு காதலர் தினம் கூட நினைவின் அதியுச்சியில் நின்று ஆடிப்போகலாம். காதல் அழகானது என்பதனால் தான் என்னவோ, அதன் உணர்ச்சிக் கரங்களால் பிடிக்கப்பட்டவர்களும் அழகாக மாறுகின்றார்கள். அப்படிப் பிடிக்கப்பட்டவர்களுக்குத் தாம் காதல் கொண்டவரும் அழகாகத் தெரிகின்றார்கள். காதல் அப்படி என்ன தான் செய்துவிடும்? கல்லைப் பூவாக்கும், வில்லை பொடியாக்கும், சொல்லைக் கவியாக்கும், நெல்லைச் சோறாக்கும். இவைமட்டுமா! வானவில்லில் முகிலைத் தோய்த்து எடுக்கும், மனதுக்குள் ஒரு பூங்காட்டையே வளர்க்கும். கற்பனை உலகில் கதிரவனை கீழ்ப்படிய வைக்கும். கண்ணுதலான் தன் தொண்டர்களிடம் செய்த கூத்தைப்போல் அதுவும் செய்யும். செய்து காட்டும், காட்டிச் சிரிக்கும். இது ஒரு பகுதியிலே கிடக்க விடயத்துக்குள் நுழைவோம்.

தற்காலத்தில் பலருடைய எண்ணப்பாடுகள், பத்தி பற்றி விசித்திரமாகவே இருக்கின்றன. ஒருவன் அல்லது ஒருத்தி சமயம் மீதோ அல்லது இறைவன் மீதோ அதீத ஈடுபாடு காட்டினால், அவனை அல்லது அவளைத் துறவி என்ற கோணம் வரைக்கும் இந்தச்சமூகம் இழுத்துச்சென்று விடுகிறது. பத்தி என்பது துறவிகளுக்கு மட்டுமே உரித்தான பரம்பரைச் சொத்து என்பது தான் தற்காலப் புலமைசார் அறிவுப் பெருஞ்சமூகத்தின் கொள்கை. இறைவன் மீது ஒருவன் அல்லது ஒருத்திக்கு ஈடுபாடு ஏற்பட்டால் போதும் அவ்வளவு தான் மொத்த சமூகமும் வரிந்து கட்டிக் கொண்டு வந்து அவனை அல்லது அவளை வெருட்டிப் பயமுறுத்தி பத்தியிலிருந்து பிரித்தெடுக்கும், அவன் அல்லது அவள் இறைவனைப் பிரியாவிட்டால் இந்தப் பாழஞ்சமூகம் அவனை அல்லது அவளை இல்லற வாழ்விலிருந்து தூக்கியே எறிந்து விடும். இப்படிப்பட்ட பேரறிவுச்சமூகத்தின் பெரும் ஞானத்தை நினைத்து சிரிப்பதா, அழுவதா என்று கூடத் தெரியவில்லை. இறைவனை அடையத் துறவு ஒரு வழி அவ்வளவுதான். துறவு மட்டும் தான் வழி என்று அனைவரும் கமண்டலங்களைத் தூக்கிக்கொண்டு காட்டிற்குச் சென்றால் காடு தாங்காது. தமிழர்தம் பெருநெறியின் அங்கங்களில் இன்பவியலும் ஒன்று என்பது நீக்கவோ, நிராகரிக்கவோ பட முடியாத ஒன்று.

காதல் என்பது அற்புதமானது. அளவிடமுடியாதது. காதலின் சிறப்பே அதன் அழகுதான். அழகு என்பது புற அழகையோ, நிலை அழகையோ அல்ல. அதன் உணர்ச்சிப் பெருக்கின், அதன வீரியத்தின் அழகு. அதே நேரம் பத்தி என்பது அதிஅற்புதமானது. அளவிடவும், வகைப்படுத்தவும் இயலாதது. பத்தியின் சிறப்பு அதன் அழகும், அழகைத்தாண்டிய அன்புமே என்றால் கூட சரிதான். ஆக பத்தியும் காதலும் ஒரு மரத்தின் இரு கிளைகள், ஒரு கிளையின் இரு மலர்கள், ஒரு மலரின் இரு இதழ்கள், ஒரு இதழின் இரு நிறங்கள். சைவப்பெருஞ்சமயத்தின் அறுபத்து மூன்று நாயன்மார்களும் துறவிகளா என்றால் கிடையாது. அவர்களில் இல்லறத்தை வெறுத்தவர்களும் உள்ளார்கள். ஆனால் அவர்கள் அனைவரும் இல்லறத்தை வெறுக்கவில்லை. அது தான் சைவப் பெருஞ்சமயத்தின் தன்னிகரில்லா சிறப்பு.

ஒரு காட்சி கண்முன்னே விரிகிறது. இந்தக் காட்சியைப் படம் போட்டுக் காட்டியவர் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான். வேறு ஒன்றும் பெரிதாக இல்லை. நம் சுந்தரரும், அம்மை பரவையாரும் ஒருவரை ஒருவர் காணுகின்றனர். இந்த இடத்தில் வைத்து சேக்கிழார் பெருமான் ஒரு தமிழ் வெடிப்பையே நிகழ்த்தி விடுகிறார். அந்த வெடிப்பிலிருந்து காதல் எனும் வாசனை பரவ ஆரம்பிக்கிறது. பரவையாரைக் கண்ட சுந்தரர் தன் கண்களை அகலத்திறந்து அதிசயிக்கின்றார். தன் கண்முன்னே இருக்கும் பொருள் என்ன என்று சுந்தரரின் மனம் தேடிக்கதறுகிறது. பூத்துக்குலுங்கும் கற்பக மரக்கொப்போ? காமனுடைய வாழ்க்கையோ? அழகு என்ற பொருள் செய்த புண்ணியத்தால் விளைந்த புண்ணியமோ? மேகத்தை சுமந்து, வில்லையும், குவளையையும், பவளமலரையும், மதியையும் பாகங்களாகக் கொண்ட கொடியோ? அல்லது அவை அல்லாத அற்புதமோ? அவற்றுக்கும் மேலான சிவன் அருளோ? தான் அறியேன் என்று இறுதியில் உவமித்துக் தோற்கிறார் சுந்தரர்.

**“கற்பகத்தின் பூங்கொம்போ**
**காமன் தன் பெருவாழ்வோ**
**பொற்புடைய புண்ணியத்தின்**
**புண்ணியமோ புயல்சுமந்து**
**வில்குவளை பவளமலர்**
**மதிபூத்த விரைக்கொடியோ**
**அற்புதமோ சிவன் அருளோ**
**அறியேன் என்று அதிசயித்தார்”**

என்று சேக்கிழார் இதை விவரிக்கின்றார். பரவையார் இன்னும் சற்று மேலே போய், வந்தவன் முருகனோ? காமனோ? விஞ்ஞையர்களில் ஒருவனோ? சிவனருள் பெற்றவனோ? இவர்களில் யாரோ என்று அதிசயிக்கிறார். இத்தகு காதல் காப்பிய வரிகளுக்கு காரணமாய் அமைந்த சுந்தரர்தான், ஈசனையே அதே பரவையாரிடம் பின்னர் தூது விடுக்கின்றார். கடவுளையே காதலுக்காகத் தூது போகவைத்த பத்தி அது, அதுதான் சைவத்தின் தனித்தன்மை.

**“மோகம் அறுத்திடின் நாம் பூத்தி கொடுப்பதென**
**ஆகமங்கள் சொன்ன அவர் தம்மைத்-தோகையர்பாடும்**
**தூதாகப் போகவிடும் வன்தொண்டன் தொண்டுதனை**
**ஏதாகச் சொல்வேன் இனியான்”**

இது திருக்களிற்றுப்படியாரின் வார்த்தைகள். பத்தி தூய்மையாக இருந்தால் அவன் சுந்தரருக்கு மட்டுமல்ல உங்களுக்காகவும் தூது போவான். ஆக காதலியுங்கள், காதலிக்காமல் விடுங்கள். ஆனால் காதலித்துப் பத்தி செய்யுங்கள் கட்டாயம் கங்கைச் சடையான் வருவான். வந்து தான் ஆகவேண்டும் ஏனெனில் அவன் பத்திக்கு அடிமை.

திருச்சிற்றம்பலம்

# பிள்ளைச் செல்வம் கிடைக்கப் பெறுவதற்கும், வாதத்திறமை மற்றும் எழுத்தாற்றல் பெருகுவதற்கும் ஓதவேண்டிய திருவெண்காட்டுத் திருப்பதிகம் - கண் காட்டும் நுதலானும்

## திருவெண்காடு - திருவெண்காடர் திருக்கோயில்



சிவனின் தேவாரப் பாடல் பெற்றக் கோயில்களில் இது 11ஆவது திருக்கோயிலாகும். காசிக்கு நிகரான கோயிலாகும். திருவெண்காடு கோயில் குறித்து திருஞானசம்பந்தர், அப்பர், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய மூவரும் பதிகம் பாடியுள்ளனர். இக்கோயிலிலே சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், அக்கினி தீர்த்தம் என்று மூன்று தீர்த்தங்கள் உள்ளன. இம் மூன்று தீர்த்தங்களிலும் நீராடி திருஞானசம்பந்தர் பாடிய திருவெண்காட்டுப் பதிகத்தினைப் பாடி வழிபட்டால் மக்கட் செல்வம் கிட்டும் என்பது திண்ணம்.

அச்சுதக்களப்பாளர் என்பவர் தனது ஆசிரியர் அருள்நந்தி சிவாச்சாரியர் கூறியபடி இப்பதிகத்தினை பாடி இத்தலத்தின் தீர்த்தங்களில் மூழ்கி வழிபட்டதனாலேயே சைவசித்தாந்தத்தின் மூலகுருவான மெய்கண்டதேவர் இவருக்கு மகனாகப் பிறந்தார். இத்தலம் புதன் சிவனை வழிபட்ட தலம். மேலும் இப்பதிகத்தினைப் பாடுவோர் கல்வி கேள்வியிலும், வாக்கு வன்மையிலும் சிறந்து விளங்குவர் என்பது கூடுதல் சிறப்பாகும்.

**இறைவன்** - திருவெண்காடர்
**இறைவி** - பண்மொய்த்த இன்மொழியாள், வேயனைய தோளுமை (பிரம்ம வித்யா நாயகி)
**பண்** - சீகாமரம்
**இராகம்** - நாதநாமக்கிரியை

**திருச்சிற்றம்பலம்**

கண் காட்டும் நுதலானும் கனல் காட்டும் கையானும்
பெண் காட்டும் உருவானும் பிறை காட்டும் சடையானும்
பண் காட்டும் இசையானும் பயிர் காட்டும் புயலானும்
வெண் காட்டில் உறைவானும் விடை காட்டும் கொடியானே - 1

பேய் அடையா பிரிவு எய்தும் பிள்ளையினோடு உள்ளம் நினைவு
ஆயினவே வரம் பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமை பங்கன் வெண்காட்டு முக்குள நீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாம் தீவினையே - 2

மண்ணொடு நீர், அனல், காலோடு, ஆகாயம், மதி, இரவி,
எண்ணில் வரும் இயமானன், இக பரமும் எண்திசையும்
பெண்ணினொடு ஆண் பெருமையொடு சிறுமையும் ஆம் பேராளன்
விண்ணவர்கோன் வழிபட வெண்காடு இடமா விரும்பினனே - 3

விடம் உண்ட மிடற்று அண்ணல் வெண்காட்டின் தண்புறவின்
மடல் விண்ட முடத்தாழை மலர் நிழலைக் குருகு என்று

வேலை மலி தண்கானல் வெண் காட்டான் திருவடிக்கீழ்
மாலை மலி வண்சாந்தால் வழிபடு நல் மறையவன்தன்
மேல் அடர்வெங்காலன் உயிர் விண்ட பினை நமன் தூதர்
ஆலமிடற்றான் அடியார் என்று அடர அஞ்சுவரே - 5

தண்மதியும் வெய்யரவும் தாங்கினான் சடையின் உடன்
ஒண்மதிய நுதல் உமை ஓர் கூறு உகந்தான் உறைகோயில்
பண்மொழியால் அவன் நாமம் பல ஓதப் பசுங்கிள்ளை
வெண்முகில் சேர் கரும்பெணை மேல் வீற்றிருக்கும் வெண்காடே - 6

சக்கரம் மாற்கு ஈந்தானும் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கு அரைமேல் அசைத்தானும் அடைந்து அயிராவதம் பணிய
மிக்க அதனுக்கு அருள் சுரக்கும் வெண்காடும் வினை துரக்கும்
முக்குளம் நன்கு உடையானும் முக்கண் உடை இறையவனே - 7

பண்மொய்த்த இன்மொழியாள் பயம் எய்த மலை எடுத்த
உன்மத்தன் உரம் நெரித்து அன்று அருள் செய்தான் உறைகோயில்
கண்மொய்த்த கரு மஞ்ஞை நடம் ஆடக் கடல் முழங்க
விண்மொய்த்த பொழில் வரிவண்டு இசை முரலும் வெண்காடே - 8

கள் ஆர்செங் கமலத்தான் கடல் கிடந்தான் என இவர்கள்
ஒள் ஆண்மை கொளற்கு ஓடி உயர்ந்து ஆழ்ந்தும் உணர்வு அரியான்
வெள் ஆனை தவம் செய்யும் மேதகு வெண் காட்டான் என்று
உள்ஆடி உருகாதார் உணர்வு உடைமை உணரோமே - 9

போதியர்கள் பிண்டியர்கள் மிண்டு மொழிபொருள் என்னும்
பேதையர்கள் அவர் பிறிமின் அறிவுடையீர் இதுகேள்மின்
வேதியர்கள் விரும்பியசீர் வியன் திருவெண்காட்டான் என்று
ஓதியவர் யாதும் ஒரு தீது இலர் என்று உணருமினே - 10

தண் பொழில் சூழ் சண்பையர் கோன் தமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலி வெண் பிறைச் சென்னி விகிர்தன் உறை வெண்காட்டை
பண் பொலி செந்தமிழ் மாலை பாடிய பத்து இவை வல்லார்
மண் பொலிய வாழ்ந்தவர் போய் வான் பொலியப் புகுவாரே - 11

**திருச்சிறம்பலம்**

**திருவெண்காடு செல்லுங்கள் :**


கருவில் திருவோடு பிள்ளைச் செல்வம் கிடைப்பதற் வாதத்திறமை மற்றும் எழுத்தாற்றல் பெருகுவதற்கும் க காட்டும் நுதலானும் எனும் பதிகத்தினை வெண்காட்டுநாத நினைந்து மனமுருகிப் பாடி பலன் பெற்றவர்க திருவெண்காட்டுக் கோயிலுக்கு ஒருமுறையாவது செ பண்மொய்த்த இன்மொழியாள் அம்மை உடன திருவெண்காட்டுநாதரை வழிபட எல்லாம்வல்ல திருவ கைகூடட்டும்.

சென்னையில் இருந்து கடற்கரை வழியாக 254 கி



திருவெண்காட்டு நாதர்

மீட்டர் தூரத்திலும், விழுப்புரம் வழியாக 267 கிலோ மீட் தூரத்திலும் நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு உட்பட திருவெங்காடு பகுதியில் அமைந்துள்ளது திருவெண்க கோயில்.



# ஈழத்து சித்தர்கள்: தவத்திரு சித்தானைக்குட்டி சுவாமிகள்

(சித்தானைக்குட்டிச் சுவாமிகள் சென்ற திங்கள் தொடர்ச்சி)

சித்தானைக்குட்டிச் சுவாமிகள் கதிர்காமத்தில் பல சித்துக்கள் விளையாடினார். தீர்த்தம் முடிந்ததும் அம்பாந்தோட்டைக்குச் சென்று கப்பல் ஏறி மட்டக்களப்பை அடைந்தார். மட்டக்களப்பில் கார்த்திகேசு சுப்பிறிந்தர் வீடு மிகப் பிரபல்யமானது. அவர் ஒரு பத்தர். அடியார்களை ஆண்டவன் எனவே எண்ணி உபசரிப்பவர். அதனால் அவரைக் கார்த்திகேசு சுவாமிகள் என்றும் ஊரவர்கள் அழைப்பார்கள். இத்தகைய அன்பருடைய வீட்டுக்குச் சென்று சுவாமிகள் அமைதியாக சில மாதங்கள் கழித்தார்கள்.

### ஓவசியருக்குச் சோதனை காலம்

ஓவசியர் அடுத்த நாள் தனது மேலதிகாரியாகிய பொறியாளரிடம் சென்றார். காரணம் எதுவுமே இல்லாமல் பொறியாளர் ஓவசியரோடு வேண்டா வெறுப்பாகப் பேசினார். இதனால் வெறுப்புக் கொண்ட ஓவசியருக்கும் பொறியாளருக்குமிடையே வாய்ப்போர் ஏற்பட்டது. பொறியாளர் ஒரு வெள்ளைக்காரர். கருப்பு மனிதன் தனக்கு மரியாதை கொடுக்காமல் பேசிவிட்டான் என்பது அவருடைய முறைப்பாடு. ஓவசியர் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். ஓவசியர் கொழும்புக்குச் சென்றார் பணம் செலவழித்தார். பலன் ஒன்றும் இல்லை. நிரந்தரமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டார். இளைப்பாற்றுச் சம்பளம் தானும் பெறமுடியாமல் தவித்தார். சம்பளம், கிம்பளம், மேல்வெட்டு இத்தனை வரும்படியும் ஆறுபோல் பாய்ந்த ஓவசியருக்கு எல்லாம் திடீரென அடைபட்ட உடன் என்ன செய்வதென்றறியாது திகைத்தார். மற்றைய ஓவசியர்மார் வீடுவாசலைக்கட்டி, காணி வாங்கி பிள்ளைகுட்டி களுக்கென்றாவது பணத்தைச் சேகரித்து வைத்தார்கள். இந்த மனிதனோ குடிதான் சுவர்க்கம் என்று வாழ்ந்தவர். தேட்டம் எதுவும் தேடினாரும் அல்ல.




ஓவசியருக்கு இப்போ கொஞ்சம் ஞானம் உதய மாயிற்று. தான்செய்த அடாவடித்தனம் எல்லாவற்றையும் நினைவு கூர்ந்தார். எப்போதும் அன்பாகவே தம்மோடு பழகிவந்த பொறியாளர் காரணமின்றித் திடீரெனக் கோபம் கொள்ள வேண்டிய காரணம் என்னவாயிருக்கும் என்பதை ஆழ்ந்து யோசித்தார். உள்ளத்தில் உண்மை உதயமாயிற்று. மனைவியை அன்போடு அழைத்தார்.

“அடி ஆத்தாளே, உன்னுடைய சாமியாராலேதான் இந்த வரத்து வந்திருக்கு் உடனே மட்டக்களப்புக்குச் சென்று சுவாமியைத் தேடிப்பிடித்துத் தக்க பரிகாரம் தேடிக்கொண்டு வருவாயாக” என்று கூறி அனுப்பி வைத்தார்.

அம்மையாரும் உடனே சென்று கப்பல் ஏறி மட்டக்களப்புக்குச் சென்று சேர்ந்தார். கார்த்திகேசு சுவாமியாருடைய வீட்டில் சுவாமிகளை அம்மையார் சந்தித்தார். சுவாமிகளைக் கண்டதும் அவரது பாதங்களில் வீழ்ந்து வணங்கினார். கண்ணீரால் சுவாமிகளுடைய பாதங்களைக் கழுவினார். நாத்தழுதழுக்க மன்னிக்குமாறு வேண்டினார். சுவாமியவர்களோ, “ஏனம்மா இங்கு வந்தீர்கள்? நான் ஒரு தீமையுமே உன் புருஷனுக்குச் செய்தறியேன். அவரவர் செய்த வினையை அவரவர் அனுபவித்துத் தானே ஆக வேண்டும். ஒருவர் செய்த வினையை இன்னொருவர் அனுபவிக்க முடியாது் பக்கத்திலே கதிர்காமசுவாமி இருக்க இங்கு ஏனம்மா வந்து அலைந்தீர்கள்? கதிர்காமத்து ஐயனிடம் சென்று முறையிடுங்கள்” என்று கூறி அம்மையாரைச் சுவாமிகள் கப்பலேற்றி அம்பாந்தோட்டைக்கு அனுப்பி வைத்தார்கள்.

அம்மையார் நலமே திசையைச் சென்று அடைந்தார்கள். நடந்த எல்லாவற்றையும் ஒன்றும் விடாமல் கூறினார்கள். ஆனால் ஓவசியரின் எந்த முயற்சியும் பலன் அளிக்கவில்லை. எடுத்த முயற்சி எல்லாம் தோல்விக்குமேல் தோல்வியாகவே முடிந்தன. கடன்காரரர் தினமும் ஓவசியரை நெருக்கத் தொடங்கினர். நீதிமன்றத்தில் கடன் சம்பந்தமான வழக்குகளும் தாக்கலாயின.

அம்மையார் ஒரு முறைக்குப் பலமுறை சிந்தித்தார் ஆழ்ந்து சிந்தித்தார். தனக்கு ஒரு நல்ல வழிகாட்டுமாறு முருகப் பெருமானை வேண்டினார். தான் ஓவசியருடன் இருப்பதால் தனக்கும் ஒரு நன்மையும் இல்லை் தன்னால் ஓவசியருக்கும் ஒரு நன்மையும் இல்லை என்று உணர்ந்தார். இவ்வளவு நாளும் திருந்தாத ஓவசியர் இனிமேலும் திருந்தப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்தார். தான் இல்லாவிட்டால் தானாகப்பட்டாவது திருந்தக் கூடும் என்று எண்ணினார். கதிர்காமத்தையனை மனத்திலிருத்தியவராய் அம்மையார் மட்டக்களப்பு நோக்கிப் பிரயாணம் ஆனார்.

### சேதம்மா சித்தானைக்கு அடிமையாதல்

அம்மையார் நேராகக் கார்த்திகேசு சுவாமிகளுடைய இல்லத்திற்குச் சென்றார். அங்கிருந்த சித்தானை சுவாமிகளிடம் ஓடிச் சென்று திருப்பாதங்கள் இரண்டையும் சிக்கெனப் பிடித்துக் கொண்டார். “இனிமேல் நீர் தான் என் துரை நான் இனிமேல் உம்மோடு இருந்து வாழப் போகின்றேன். இதைத் தட்டாமல் என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும்” என்று வேண்டிக் கொண்டார். சுவாமிகள் பல எடுத்துக்காட்டுகள் எடுத்துக் கூறியும் அம்மையார் தாம் பிடித்த பிடியை விடவில்லை. தனக்கும் கெட்டபெயர் வரப்போகிறது் அம்மையாருக்கும் கெட்டபெயர் வரப் போகிறது என்றெல்லாம் கூறினார்கள். அம்மையார் எதற்கும் மசியவில்லை. கார்த்திகேசு சுவாமிகள் அம்மையாரைப் பார்த்து, “அம்மா,சுவாமிகளைத் தொந்தரவு பண்ணாதீர்கள். அவரை அவருடைய வழியிலே விட்டு விடுங்கள். உங்களுக்கு நான் மாதா மாதம் ஐம்பது ரூபா அனுப்பி வைக்கின்றேன்” என்றார்கள். அதற்கு அம்மையார், “எனக்கு உமது பணம் வேண்டாம். எனக்குச் சுவாமிகளைத்தான் வேண்டும்” என ஒரே பிடிவாதமாக நின்றார்கள்.

சுவாமிகள் முக்காலமும் உணர்ந்தவரல்லவா? தமது வினைப்பயனும் அனுபவித்துப் பொசுக்க வேண்டுமே என எண்ணினார். குருநாதனின் தீர்க்க தரிசனமும் நடந்தேற வேண்டுமே எனத் திருவுளங் கொண்டார். அம்மையாரின் வேண்டுகோளின் படியே அம்மையாரோடு கூடிக்கொண்டு காரைதீவுக்குச் சென்றார். அம்மையாருடைய பெயரில் காரைதீவிலே ஒரு காணியிருந்தது. அக்காணியில் ஒரு பெரிய புளிய மரமும் ஒரு வீடும் இருந்தன.

அவ்வீட்டிலேதான் சுவாமிகளும் அம்மையாரும் குடி இருந்தனர். காரைதீவு சென்றதும் அம்மையார் முதன் முதலாகச் செய்த வேலை தனது பேரிலிருந்த காணியைச் சுவாமிகள் பேரில் எழுதி வைத்ததாகும். திசைம காரகமவில் கடன் தொல்லை பொறுக்க முடியாது ஓவசியர் இரவோடிரவாகப் புறப்பட்டு காரைதீவு வந்தடைந்தார். அம்மாவையும் சுவாமியையும் சந்தித்து அவர்களிடம் மன்னிப்புக் கோரி மூவரும் சிறிது காலம் அவ்வீட்டிலேயே வாழ்ந்தனர். ஓவசியரின் கடன்காரரர் காரைதீவிலுள்ள அம்மையாரின் வீடுவளவைப் பறிமுதல் செய்வதற்காக வழக்குத் தொடுத்தனர். சுவாமிகள் நீதிமன்றம் ஏறி வழக்குப் பேசி வழக்கினை வென்றார். அன்று தொடக்கம் குறிப்பிட்ட வீடும் வளவும் சுவாமி அவர்களுடைய பேரிலேயே இருந்து வருகிறது.

குருநாதன் சொன்ன புளியமரத்து வீட்டுக்காரி இந்தச் சேதம்மாவேதான். கள்ளன் என்பது ஓவசியர. கள்ளன் பெண்ணை எடுப்பாய் என்றது அம்மையாரை. வழக்குவரும் வம்புவரும் என்றது அம்மையாரையும் சுவாமிகளையும் பற்றி எத்தனையோ கதைகள், கற்பனைகள், காணிக்காகச் சுவாமிகளே கோடேறி வழக்குப் பேசிய நிலைமைகள்.

முதல் முதல் அம்மையாரையும் சுவாமிகளையும் வம்பு சொன்னவர் ஓவசியர்தான். அவர் அங்ஙனம் சொல்லி வாழ்க்கையில் அவர்பட்டபாட்டை அறிந்தோம். சிலருக்கு நாக்குக் கொஞ்சம் நீளம். அதனால் உண்மையோ பொய்யோ வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசிவிடுவார்கள். கோள் சொல்லுவார்கள். தாமே பிறருடைய கர்மத்தை வாங்கி அனுபவிக்க வேண்டி ஏற்படுகிறது. பிறருடைய தீமைகளை எடுத்து நாம் பேசும்போது அவருடைய பாவத்தில் ஒரு பகுதியை நாம் பெற்றுக்கொண்டு எமது புண்ணியத்தில் ஒரு பகுதியை அளித்து விடுகின்றோம். மகான்களைப் பற்றிக் குறை கூறுபவர்கள் அவர்களைப் பற்றிக் கூறும் அவதூறு அவ்வளவையும் தாமே அனுபவித்துத் தொலைக்க வேண்டியவர்களாவார்கள்.

மகான்களைப் பற்றிக் கூறும் அவதூறுகளை எல்லாம்



அவர்கள் ஒரே ஒரு வார்த்தையில் இவை எமக்குச் சொந்தமும் இல்லை் இவை எமக்கு வேண்டியதும் இல்லை என்று சொல்லிவிடுவார்கள். மகான்களுடைய ஆத்மீக சத்தியால் அவதூறுகள் யாவும் எந்த இடத்திலிருந்து புறப்பட்டனவோ அந்த இடத்தை நோக்கிச் செல்லும். திரும்பிச் சென்ற பிசாசு சும்மா விடுமா? அதன் வேகத்தை ஏவிவிட்டவரே தாங்க வேண்டும். அதன் வேகத்தைத் தாங்க மாட்டாது உயிரை மாய்த்துக் கொண்டவர்களும் உண்டு. தன்வினை தன்னைச் சுடும் அல்லவா?

### ஓவசியரின் முடிவு

ஒருநாள் ஓவசியர் நன்றாக மது அருந்திவிட்டு வீட்டுக்கு வந்திருந்தார். கட்டிய பெண்டாட்டி சுவாமி மீதுதான் உயிராயிருக்கிறாள். அவளுடைய சொத்தோ சுவாமிக்குச் சொந்தமாகிவிட்டது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து ஓவசியருக்குச் சுவாமி மீது குரோதத்தை உண்டாக்கிவிட்டது. வறியில் சுவாமியைக் கத்தியால் குத்திக் கொல்வதற்கு ஓவசியர் முயன்றார். சுவாமிகள் உடனே கத்தியைப் பறித்துத் தூர வீசி விட்டார். சுவாமிகளிடம் தனது தீமை எதுவும் பலிக்காதது கண்ட ஓவசியர் உன்னிச்சைப் பகுதிக்கு வேலை தேடிச்சென்றார். சில காலம் கொந்தறாத்து வேலை செய்து கொண்டிருந்து, அங்கேயே காலமானார். அங்கேயே அவரது அடக்கமும் நடைபெற்றது.

ஓவசியரைத் தொடர்ந்து சேதம்மாவும் காரைதீவில் சமாதி அடைந்தார். அவருடைய சமாதியை சுவாமிகள் எதிரே உள்ள வளவில் முறையாக வைத்தார். சேதம்மாவுக்கு ஒரு மாமியார். அவரின் பெயர் சிந்தாமணி அம்மையார். சேதம்மாவுக்குப் பின் சுவாமிகளுக்குத் தொண்டு செய்யச் சிந்தாமணி அம்மையார் வந்திருந்தார்கள். இப்பொழுதும் மக்கள் சுவாமியுமைம் சிந்தாமணி அம்மையையும் ஒரு முடிச்சுப் போட்டு விட்டார்கள். எலும்பில்லா நாவால் எல்லாம் பேசிக் கொள்வார்கள்.

சுவாமிகள் அந்தக் காலத்திலே தலையில் தலைப்பாகை யுடனும் கையில் ஒரு பிரம்புடனும் மகாராசா மாதிரி உலாவுவார்கள். காலில் மிதிதடியும் இருக்கும். அக்காலத்தில் சுவாமிகளோடு கோளாவில் கந்தன் பரிகாரியார், வெள்ளையப் போடியார் பூபாலபிள்ளை, ஆறுவிரல் கந்தையா, மேசன் வேலுப்பிள்ளை, சவரத்தொழிலாளி குஞ்சர் முதலியோர் அடிக்கடி நெருங்கிப் பழகியவர்களாவர். கல்முனையில் கடை வைத்திருந்த வீரப்பச் செட்டியாரும் மிக முக்கியமானவர். செட்டியாரோடு எதிர்மன்னசிங்க உபாத்தியாயர் நல்ல நண்பர். எதிர்மன்னசிங்க உபாத்தியாயர் மெதடிஸ்ட் மிஷனைச் சேர்ந்தவர். அவருக்குச் சாதுக்கள் மீது ஒரு தனிப்பிரியம். வீரப்ப செட்டியார் மூலமும் வேறு நண்பர்கள் மூலமும் சுவாமிகளுடைய மகிமையைக் கேள்வியுற்றிருந்தார். நல்ல ஒரு தினத்தில் சுவாமிகளைச் சென்று காணவேண்டுமென ஆவல் கொண்டிருந்தார். சுவாமிகளின் பெருமைகளைப் பலரும் பலவிதமாகக் கூறியிருந்த போதிலும் வீரப்பச் செட்டியார் தமது சொந்த அனுபவம் ஒன்றைக் கூறியபோதுதான் எதிர்மன்னசிங்க உபாத்தியாயருக்குச் சுவாமிகளைக் காண வேண்டும் என்ற அவா மேலிட்டெழுந்தது. காணாமலிருக்க முடியாது என்ற நிலைக்கு மனதில் ஆர்வம் பொங்கியெழுந்தது.

(சித்தானைக்குட்டிச் சுவாமிகளின் சித்துக்கள் தொடரும்)

திருச்சிற்றம்பலம்

ஆக்கம் : ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள்
தொகுப்பு : சிவத்திரு.வடிவேலு கங்காளன்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று- எம்பிரான் திருஞானசம்பந்தன்!




சிவத்திரு.
பா.சிவமாதவன்
புதுக்கோட்டை

சைவம் தான் பெற்ற புண்ணியக்கண் இரண்டு. அதிலொருவர் அப்பர் பெருமான். மற்றொருவர் திருஞானசம்பந்தப் பெருமானாவார். சம்பந்தப் பெருமான் பல வகையான அற்புதங்களை இறையருள் முன்னிற்க நிகழ்த்தினார். அவருடைய பிறப்பு என்பது சைவத்தை நிலைநிறுத்தவும், தமிழ் செய்தவம் பெருகவும் நிகழ்ந்தது. அதுமட்டுமின்றி திருஞானசம்பந்தப் பெருமானுக்கு இறைவன் அம்மையப்பனாக இருந்து மகன்மை நெறியை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். அதனால்தான் அவரை, "சிவக்கன்று" எனக் குறித்தனர். மனிதப் பிறப்புக்கள் இரண்டு வகையானது. ஒன்று, அவரவர் செய்த வினைகளுக்கு ஏற்றாற்போல் அமையும். பிறிதொன்று, இறைவன் மேம்பட்ட நிலையிலுள்ள பக்குவப்பட்ட ஆன்மாக்களை உலகுய்யும்பொருட்டு உடல்கொடுத்து பிறக்கச் செய்வதாகும். இது "அவதாரம்" எனப்படும்.

அப்படி உலகம் உய்ய வேண்டியே தோடுடைய செவியன், தொன்மை நெறிக்கேற்பட்ட தொல்லைகளை நீக்கி, நாட்டவர் நன்னெறியில் உய்ந்து, பிறப்பறுத்து பெரும்பதத்தை அடையவே தோணிபுரத்திலே ஆளுடைய பிள்ளையாரை அவதாரம் செய்ய வைத்தார். அதுவும் திருஅவதாரமாகும். இதனைப் பெரியபுராணப் பாடல் உறுதி செய்யும். அப்பாடல்

**"அவம்பெருக்கும் புல்லறிவின் சமண்முதலாம் பரசமயம்**
**பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்படநல்லூழிதொறும்**
**தவம்பெருக்கும் சண்பையிலே தாவில்சரா சரங்கள்எலாம்**
**சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதாரம் செய்தார்"**

மேலும் திருஞானசம்பந்தப் பெருமானின் அவதார நோக்கங்களை தெய்வச் சேக்கிழார் பெருமான் பட்டியலிடுகிறார். அதற்கு முன்னர் திருமுறைத் தொகுத்த சீராளராகிய நம்பியாண்டார் நம்பியவர்கள் ஆளுடைய பிள்ளையாரைப் பற்றி அதியற்புதமான பாடல்களை இயற்றியுள்ளர். அதில் "ஆளுடைய பிள்ளையார் மும்முணிக்கோவை" என்னும் பகுதியில் வரக்கூடிய ஒரு பாடல் மிகச்சிறப்பானதாகும். அப்பாடலில், பிறவி என்கின்ற பெருங்கடலை நீந்துவதற்கு தோணியாக, அதுவும் உறுதியான தோணியாக இருப்பது திருஞானசம்பந்தப் பெருமானின் பாடல்கள் என்கிறார். அதனை "ஞானத் தமிழ்" என்று குறிப்பிடுகிறார். ஞானம் தான் எல்லாவற்றையும் தரும்.




அஞ்ஞானம் அகற்றி மெஞ்ஞானத்தை தரவல்ல சம்பந்தரின் ஞானத் தமிழ் போதும் பிறவியைக் கடந்து பிஞ்ஞகனின் தாளை அடையலாம் என்பதாகும்.அப்பாடல் -

**"பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்**
**துறவியெனுந் தோற்றோணி கண்டீர் நிறையுலகில்**
**பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்**
**தன்மாலை ஞானத் தமிழ்"**

இதைப் போன்று பல சிறப்புடைய பாடல்களை திருஞானசம்பந்தப் பெருமான் மீது நம்பியாண்டார் நம்பி அவர்கள் பாடியுள்ளார். ஏனெனில் இவருடைய பிறப்பே அற்புதங்களை நிகழ்த்துவதற்கானதாகும். இனி அவரை வைத்து நடைபெற்ற அற்புதங்களைத் தொடர்ந்து காண்போம்.

### பாலறாவாயனாதல்

ஆளுடைய பிள்ளையார் நன்கு வளர்ந்து மூன்றாண்டு எய்தினார். அப்போது ஒருநாள், நீராடச் சென்ற சிவபாத விருதயருடன் அடம்பிடித்து தொடர்ந்து சென்றார் பிள்ளையார். குளக்கரையில் பிள்ளையாரை அமரச் செய்துவிட்டு சிவபாத விருதயர் திருக்குளத்தில் இறங்கி நீராடினார். தந்தையைக் காணாத பிள்ளையார். திருத்தோணிபுரச் சிகரத்தை நோக்கி, "அம்மே! அப்பா!" என்று கண்மலர்கள் நீர் ததும்ப கைம் மலர்களால் பிசைந்து மணி அதரம் புடை துடிப்ப பொருமி அழுதார். திருத்தோணியப்பர் உமையம்மையுடன் இடப வாகனத்தில் திருக்குளக் கரைக்கு எழுந்தருளினார்.

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட பாற்கடல் ஈந்த பிரான் அம்மையாரை நோக்கி ஆளுடைய பிள்ளையாருக்கு பாலூட்டு என உரிமையுடன் கூறுகிறார். அப்பாடல்

**"அழுகின்ற பிள்ளையார்**
**தமைநோக்கி அருட்கருணை**
**எழுகின்ற திருவுள்ளத்**
**திறையவர்தாம் எவ்வுலகும்**
**தொழுகின்ற மலைக்கொடியைப்**
**பார்த்தருளித் துணைமுலைகள்**
**பொழிகின்ற பாலடிசில்**
**பொன்வள்ளத் தூட்டென்ன"** - பெரியபுராணம்

அம்மையார் ஒரு பொற்கிண்ணத்தில் திருமுலைப்பாலைக் கறந்து, அதில் சிவஞானமாகிய அமிழ்தத்தையும் கலந்து, பிள்ளையாரின் கையில் கொடுத்துக் கண்ணீரைத் துடைத்தார். பிள்ளையார் ஞானப்பாலை உண்டார். ஞானப்பால் உண்டதனால் - ஞானத்தோடு சம்பந்தம் உண்டானதால் அக்கணமே அவர் திருஞானசம்பந்தர் ஆகி பாலறாவாயனாக நின்றார்.

### இறைவனை சுட்டிக் காட்டிய வெங்குரு வேந்தர்

திருக்குளத்திலிருந்து கரையேறி வந்த சிவபாத விருதயர், கடைவாயில் பாலொழுக நின்ற பிள்ளையாரைப் பார்த்து வெகுண்டார். கையில் ஒரு சிறிய கோலினை எடுத்துக் கொண்டு, "யார் கொடுத்த எச்சிற் பாலினை உண்டனை?" என்று கேட்டவாறே அடிப்பவர் போல் கோலினை ஓங்கினார்.

அந்நிலையில் திருஞானசம்பந்தர், கண்களில் ஆனந்தக் கண்ணீருடன். உச்சியின்மேல் எடுத்த கையின் ஒரு விரலாலே, விண்ணில் விடைமேல், அம்மையுடன் காட்சி தந்த திருத்தோணியப்பரைச் சுட்டிக் காட்டினார். மேலும் "தோடுடைய செவியன்" எனத் தொடங்கும் புதிய தமிழ் வேதத்தினை பாடியருளினார். என்னை இது செய்த பிரான் இவரே எனவும் இப்பதிகத்தின் மூலம் அவர் தெரிவித்தார், இதுவே தேவாரத்தின் முதற் பாடலாகும். இறைவனை சுட்டி காட்டுபவர் குருநாதர். எனவேதான் முதற் பாட்டிலேயே திருஞானசம்பந்தப்பெருமான் நமக்கு குருவாக நின்று இறைவனைச் சுட்டிக் காட்டினார். அதனால்தான் ஆச்சாரிய பெருமக்களில் முதலாவதாக வைத்து போற்றப்படுகிறார்.

### பண்- நட்டபாடை

**"தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடிக்**
**காடுடைய சுடலைப் பொடி பூசியென் உள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்தவருள் செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மான் இவனன்றே"**
- (திருமுறை 1.1.1)

**திருச்சிற்றம்பலம்**







திருமதி. வைத்தியக் கலாநிதி. சு.உமாமகேஸ்வரி அவர்களின் உயரிய சிந்தனையில் எழுந்த படைப்பான "ஞானசம்பந்தர் வாழ்வில் அற்புதங்கள்" என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டவை. இளைய தலைமுறைக்கு இந்த நூல் ஒரு வரமாகும் ஆகும். அம்மாவின் சைவப் பணிகள் மென் மேலும் தொடர எல்லாம்வல்ல அருள்மிகு ஐம்பூதநாதர் துணைநிற்கட்டும்.

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு அகிலாண்டேசுவரி உடனுறை செழுநீர்த்திரள்நாதர் (சம்புகேசுவரர்) திருக்கோயில் - திரு ஆனைக்கா

## (தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 60ஆவது திருக்கோயில் - திரு ஆனைக்கா)

வேதங்கள் நான்கும் மற்றைய பொருள்களும், பல சமயங்களும், அவற்றில் புகழ்ந்து சொல்லப்படும் கடவுள்களும், இவை அனைத்திற்கும் முன்னேயுள்ள முதற்பொருளும், வீடுபேறும் என்கின்ற, இவை எல்லாமாய் நிற்கின்ற, ஒலிக்கும் அழகிய நீரையுடைய திருவானைக்காவைத் தனதாக உடைய முதல்வன் உறையும் பதியே திருவானைக்காவல் சம்புகேசுவரர் திருக்கோயில். இத்திருத்தலம் இறைவன் திருவருளால் ஆனையால் நீராட்டப்பட்டு, திரு ஆனைக்கா என பெயர் பெற்றது.

**அமைவிடம்:** திருச்சி மாவட்டம், தமிழ்நாடு
திருவானைக்காவல் - திருவானைக்காவல் அல்லது திருவானைக்கா என்பது திருச்சி நகரத்தின் ஒரு சுற்றுப்புறப் பகுதியாகும். திருவரங்கத்திற்கு மிக அருகில், காவேரி ஆற்றங்கரையில் அமைந்துள்ளது. திருச்சிராப்பள்ளியிலிருந்து 10 கி.மி தூரத்தில் உள்ளது. தேசிய நெடுஞ்சாலை 81 வாயிலாகவும், விழுப்புரம் - மதுரை பேருந்து வாயிலாகவும் இத்தலத்தை அடையலாம்.

**இறைவர் திருப்பெயர்:** ஆனைக்கா அண்ணல், நீர்த்திரள்நாதர், சம்புகேசுவரர், சம்புலிங்கப்பெருமான், சம்புநாயகர், அமுதப்பெருமான்.

**இறைவியார் திருப்பெயர்:** அகிலாண்டேசுவரி, அகிலாண்ட நாயகி

**கோயில் மரம்:** வெண்நாவல் மரம்

**தீர்த்தம்:** காவேரித் தீர்த்தம்

**வழிபட்டோர்:** திருமால், நான்முகன், திக்குப்பாலகர், சம்புமுனி, அம்பிகை, சிலந்தி, யானை, இராமர், பராசரர், சோழன், கோச்செங்கண்ணான், கௌதமர், குபேரன், அகத்தியர், கதிரவன், சந்திரன், இந்திரன், அக்கினி முதலானவர்கள்

**பாமாலை:** அப்பர், சம்பந்தர், சுந்தரர், அருணகிரிநாதர், கமலை ஞானப்பிரகாசர், காளமேகப் புலவர், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள், தியாகராச செட்டியார் முதலானோர்கள்

### நாயன்மார்களால் பாடப்பட்ட திருப்பதிகங்கள்

### திருஞானசம்பந்தரால் படப்பட்டப் பதிகம்

“தாரமாய மாதராள் தானொர் பாகமாயினான்
ஈரமாய புன்சடை யேற்ற திங்கள் சூடினான்
ஆரமாய மார்புடை யானைக்கா விலண்ணலை
வாரமாய் வணங்குவார் வல்வினைகள் மாயுமே”

### திருநாவுக்கரசரால் பாடப்பட்டப் பதிகம்

“துன்ப மின்றித் துயரின்றி என்றுநீர்
இன்பம் வேண்டில் இராப் பகல் ஏத்துமின்
என்பொன் ஈசன் இறைவன் என்றுள் குவார்க்கு
அன்பனா யிடும் ஆனைக்கா அண்ணலே”

### சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டப் பதிகம்

“வலங்கொள்வார் அவர்தங்கள் வல்வினை தீர்க்கு மருந்து
கலங்கக் காலனைக் காலாற் காமனைக் கண்சிவப்பானை
அலங்கல் நீர்பொரும் ஆனைக்காவுடை ஆதியை நாளும்
இலங்கு சேவடி சேர்வார் எம்மையு மாளுடையாரே”

### திருத்தலச் சிறப்பு

ஐம்பூதத்தலங்களுள் இது அப்பு (நீர்) தலம். காவிரி - கொள்ளிடம் ஆகிய இரண்டு ஆறுகளுக்கும் இடைப்பட்டது. மூலத்தான மூர்த்தியிருக்கும் இடம் தரைமட்டத்திற்கும் கீழாக இருப்பதால் எப்போதும் தண்ணீர்க் கசிவு இருந்து கொண்டேயிருக்கும். ஆறுகளில் வெள்ளம் வரும்போது ஓயாமல் இறைத்துக் கொண்டே இருந்தாலன்றி, சம்புகேசுவரரைத் கும்பிட முடியாது. இத்தகைய நீர்வள மிக்கத்தலம் இதுவாகும்.

**அம்மை மாணவியாக உபதேசம் பெற்றமை:** சத்தி பீடங்களில் ஒன்றான இத்தலத்தில், அகிலத்தை (உலகம்) காப்பவளாக அம்மை அருளுவதால் ‘அகிலாண்டேசுவரி’ என்றழைக்கப்படுகிறார். அகிலாண்டேசுவரி அம்மை, இத்தலத்தில் சம்புகேசுவரரை உச்சிக்காலத்தில் பூசிப்பதாக நம்பிக்கை. எனவே மதிய வேளையில் அம்மைக்கு பூசை செய்யும் அர்ச்சகர், அம்பாள் அணிந்த புடவை, கிரீடம் மற்றும் மாலை அணிந்து, கையில் தீர்த்தத்துடன் முழவிசை முழங்க சிவன் சன்னதிக்கு செல்வார். சுவாமிக்கு திருமஞ்சனம் செய்து, கோமாதா பூசை செய்துவிட்டு அம்பாள் சன்னதி திரும்புவார். இந்த பூசையை அம்பாளே நேரில் சென்று செய்வதாக நம்பிக்கை. இந்நேரத்தில் அர்ச்சகரை அம்பாளாக பாவித்து பத்தர்கள் வணங்குகின்றனர்.

ஆடித் திங்களில் அம்மை இங்கு சிவனை வேண்டி தவமிருந்ததாக நம்பிக்கை. எனவே, இத்தலத்தில் ஆடி வெள்ளி திருவிழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. ஆடி வெள்ளியன்று அதிகாலை 2 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணி வரையில் தொடர்ச்சியாக நடை திறந்திருக்கும். அம்பாள் காலையில் அலைமகளாகவும், உச்சிக்காலத்தில் மலைமகளாகவும், மாலையில் கலைமகளாகவும் காட்சி தருகிறாள். சிவன், அம்மைக்கு இத்தலத்தில் குருவாக இருந்து உபதேசம் செய்ய, அம்பாள் மாணவியாக இருந்து கற்றறிந்தார். எனவே மாணவர்கள் இங்கு அதிகளவில் வேண்டிக்கொள்கிறார்கள்.

**ஒன்பது துளை சன்னல்கள்:** சம்புகேசுவரர் அமர்ந்துள்ள கருவறை எதிரில் வாசல் கிடையாது. ஒன்பது துளைகளுடன் கூடிய கல் சன்னல் இருக்கிறது. பத்தர்கள் இந்த துளை வழியே தான் சுவாமியை வழிபட வேண்டும். இந்த சன்னல்கள், மனிதன் தன் உடலிலுள்ள ஒன்பது வாசல்களையும் அடக்கி சிவ வழிபாட்டைச் செய்ய வேண்டுமென் பதை உணர்த்துகிறது.

சிவன் கோயில்களில் ஐப்பசி நிறைமதியில், அன்னத் திருமஞ்சனம் செய்வது வழக்கம். ஆனால், இங்கு வைகாசி நிறைமதியில் அன்னத் திருமஞ்சனம் செய்கின்றனர். இங்கு சிவன் சன்னதியில் எப்போதும் நீர் ஊ ற ி க . கொண்டிருக்கிறது. ஐப்பசித் திங்களில் மழைக்காலம் என்பதால், கருவறைக்குள் தண்ணீர் வழக்கத்தை விட அதிகமாக இருக்கும். எனவே அன்னத் திருமஞ்சனம் செய்வது சிரமம். வைகாசியில் தண்ணீர் குறைந்து, ஈரப்பதம் மட்டுமே இருக்கும். எனவே அந்நேரத்தில் அன்னத் திருமஞ்சனம் செய்கின்றனர். ஐப்பசி நிறைமதியில் இலிங்கத்திற்கு விபூதிக்காப்பிடப்படுகிறது.

**சித்தராக வந்த சிவபெருமான்!:** மதுரையைப் போல, இத்தலத்திலும் சிவபெருமான், சித்தர் வடிவில் வந்து திருவிளையாடல் நிகழ்த்தினார். இப்பகுதியை ஆண்ட மன்னன், கோயிலின் ஐந்தாம் சுற்றுவீதியை கட்டினான். அப்போது, போர் செய்ய வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆனாலும், அவனது மனம் போர் செய்வதில் விரும்பவில்லை. அவன் சிவனை வேண்டினான். சிவன் விபூதிச்சித்தராக வந்து, சுற்றுவீதி கட்டும் வேலையை முடித்தார். இதையறிந்த மன்னன் மகிழ்ந்தான். சிவன் கட்டிய மதில் “திருநீற்றான் திருமதில்” என்றும், சுற்றுவீதி “விபூதிச் சுற்றுவீதி” என்றும் அழைக்கப்படுகிறது. விபூதி சித்தருக்கு, தீர்த்தக்கரையில் சன்னதி உள்ளது.

### திருத்தல வரலாறு

இத்தலத்தில் மிகப் பழைய காலத்தில் வெண்நாவல் மரங்கள் நிறைந்த காடு இருந்தது. இக்காட்டில் ஒரு முனிவர் தவம் புரிந்தார். ஒருநாள் அவரெதிரே ஒரு வெண்ணாவற்பழம் விழுந்தது. அதை எடுத்துக்கொண்டு முனிவர் திருக்கயிலாயம் சென்று, இறைவனுக்கு படைத்து பின்னர் உண்டார். இறைவனுக்கு படைத்தமையால் கொட்டையையும் உமிழாமல் உண்டுவிட்டார். இறைவன் திருவிளையாடலால் அக்கொட்டை முளைத்து முனிவரின் தலைவெடிக்குமாறு,



மரமாக வளர்ந்தது. முனிவர் விண்ணப்பிக்க, இறைவன் கட்டளைப்படி முனிவர் மீண்டும் நாவற் பழம் விழுந்த இடத்திற்கே மரமாக நடந்து வந்து சேர்ந்தார். இறைவன் இம்மரத்தடியில் அவர் பூசையை ஏற்று சம்பு இலிங்கமாக ஆனார். நாவல்மரம் (வெண்ணாவல்) இத்தல கோயில்மரம் ஆயிற்று.

திருக்கயிலாயத்தில் புட்பதந்தன், மாலியவான் என்ற





இரு கணநாதர் போட்டியிட்டுத் தொண்டாற்றுவதில் பெருமை கொண்டு, ஒருவரை ஒருவர் சபித்துக் கொண்டு, யானையும் சிலந்தியும் ஆயினர். இருவரும் முறையிடுவதற்கு இரங்கிய சிவபெருமான், இத்தலத்தில் வழிபட்டு முத்தி பெறுமாறு அருளினார். யானையும் சிலந்தியும் சம்புலிங்கத்தை வழிபட்டன. யானை பூவும், நீரும் கொண்டு வழிபட, மரத்திலிருந்து சருகுகள் விழாதபடி சம்புலிங்கத்திற்குச் சிலந்தி தனது வாய்நூலால் பந்தி அமைத்தது. இப்பந்தர் அநு சிதம் என்று யானை அழித்து வழிபட்டுச் சென்ற பிறகு, சிலந்தி நாடோறும் புதிய பந்தல் அமைத்து வந்தது.

பந்தரை அழிக்கும் யானையைத் தண்டிக்க எண்ணிய சிலந்தி அதன் துதிக்கைக்குள் நுழைந்து கடித்தது. யானை இறந்தது. உள்ளே புகுந்த சிலந்தியும் இறந்தவுடனே யானையும் சிலந்தியும் முறையே, புட்பதந்தனும் மாலியவானுமாக ஆயினர். சம்புகேசுவரர் அவர் முன் தோன்றிப் புட்பதந்தனை மறுபடியும் கணநாதன் ஆகும்படியும், அவன் யானை வடிவு நினைவுக்குறியாக இத்தலம் ஆனைக்கா என்று பெயர் எய்தும்படியும், மாலியவான் சோழ மன்னனாகப் பிறந்து பல தொண்டுகள் புரிந்து பிறகு வீடு எய்தும்படியும் அருள் புரிந்தார். சிலந்தியும் கோச்செங்கண்ணனாகப் பிறந்தது. இம் மன்னன் சிவபெருமானுக்கு 70 மாடக் கோயில்கள் (யானை உள் நுழையாதபடி) சிறிய வாயிலாக வைத்து எடுப்பித்தான். அவ்வாறு எடுப்பித்த கோயில்களுள் இக்கோயிலும் ஒன்று.

### திருக்கோயில் அமைப்பும், பூசைகளும்

உமாதேவியார் பூசித்த தலங்களுள் இதுவும் ஒன்று. நாடோறும் அம்மன் கோயில் அர்ச்சகர் பெண்ணுடையைத் தரித்துக் கொண்டு உச்சிக்கால பூசை வேளையில் சுவாமி கோயிலில் வழிபாடு செய்கிறார். திருவிழாவின் போது பங்குனித் திங்கள் சித்திரை நாண்மீன் அன்று ‘ஐ வீதி உலா’ உற்சவம் மிக விமரிசையாக நடைபெறும். சோமாசுகந்தர் அம்மன் வேடமும், அம்மன் சுவாமி வேடமும் பூண்டு ஐந்து வீதிகளிலும் வலம் வருவார்கள். ஆயிரக்கணக்கான மக்கள் வழிபாடு செய்வார்கள்.

திருநீற்றையே கூலியாகக் கொடுத்து ஒரு பெரியார் கட்டிய ‘திருநீறிட்டான் மதில்’ இன்றும் உள்ளது. சோழ மன்னன் ஒருவன் காவிரியில் நீராடும்போது கழுத்திலிருந்த பதக்கம் நழுவி வெள்ளத்தோடு போயிற்று. அவனும் சிவார்ப்பணம் என்று போனான். ஆற்றிலிருந்து கொண்டுவரும் திருமஞ்சன நீரில் அது அகப்பட்டுத் திருமஞ்சனம் செய்யும் போது இறைவன் திருமேனியில் விழுந்தமையும் இறைவன் திருவருளாகும்.

அம்பிகை அகிலாண்டேசுவரி திருவுருவம் அழகும் அருளும் நிரம்பியது. இத்தலத்திற்குக் கமலை ஞானப்பிரகாசர் தந்திவனப் புராணம் என்ற நூலை கச்சியப்ப முனிவர் இயற்றியுள்ளார். சுவாமியை அம்பாள் பூசித்ததாக ஐதீகம். அம்பிகை நீரைத் திரட்டிச் சிவலிங்கத் திருவுரு அமைத்த காரணத்தால் சுவாமியின் திருநாமம் ‘செழுநீர்த்திரள்’ என்றும் வழங்கப்படும்.

**சுற்றுக்கோயில்கள்** - இராசராசேசுவரர் கோயில், நீலவிண்டீசுவரர் கோயில், சங்கரேசுவரர் கோயில், பிடாரி கோயில், வீரபத்திர சுவாமி கோயில், சுப்பிரமணிய சுவாமி கோயில்.

**சிற்பங்கள்** - சுவாமி சந்நிதிக்கு முன்பு உள்ள பெரிய மண்டபம் சிறப்பானது. நான்கு பெரிய தூண்களை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு தூணுக்கும் மேல் எட்டுச் சிங்கங்கள் தாங்குவதாகக் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு தூணிலும் தலவரலாறுகளைத் தெரிவிக்கின்ற சிற்பங்கள் உள்ளன. பத்தர்கள் இம்மண்டபத்தைக் கண்டு மகிழ்வர்.

**“நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி”**

**திருச்சியற்றம்பலம்**

சிவத்திரு. தென்னாடு நிலவன்
தென்னாடு - செந்தமிழாகம சிவமடம்,
கொக்குவில், யாழ்ப்பாணம்.
+94 21 221 2739 | nilavan@thennadu.org

# சிவபூமியில் சிவனைத் தேடி -
## சோழப்பெருமன்னர் காலத்தில் பெருவளர்ச்சி கண்டிருந்த, கந்தளாய் சிவன் கோயில் [இராசேந்திரசோழீச்சரம்]



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு



சைவப்பூமியின் மகுடமாய் விளங்கும் திருகோணமலை மாவட்டத்தில் கந்தளாய்ப் பிரதேசத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க திருத்தலமாய் விளங்குவது கந்தளாய் சிவன் கோயில் ஆகும். கல்வெட்டுச் சாசனங்களில் “தென்கைலாயம்” என்று பொதுப்பெயராலும், “இராசராச ஈசுவரம்”, “விஜயராச ஈசுவரம்” போன்ற சிறப்புப் பெயர் களாலும் அழைக்கப்பட்டு வந்த சிவன் கோயிலாகவும் விளங்கியுள்ளது.

### திருத்தலவூரின் சிறப்புக்கள்

பண்டைத் தமிழர்கள் இயற்கை வனப்பும் அமைதியும், தூய்மையும் நிறைந்த சூழல்களிலேயே தெய்வவழிபாட்டுத் தலங்களை நிறுவி, வழிபாடுகளை நிகழ்த்தி வந்திருப்பது காலாகாலமாக நிகழ்ந்து வரும் மரபாகும். அந்தவகையில் நோக்கும் போது கந்தளாய் ஊரும், சிவப்பரம்பொருளின் இடமாக புனிதத் தன்மை பெற்றுள்ளது. மற்றும் குளக்கோட்ட மன்னனின் திருப்பணியாய் அமைந்த குளமும் இவ் ஊரிற்கு வரலாற்றுப் பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ளது. கந்தளாய்க் குளத்தோடு ஒட்டிய கோணமாமலையாரின் தானபூமியான வயல்வெளிகளும், சிறுகாடுகளும் கொண்ட ஊரில் தொன்மைக் காலத்தில் தமிழர் பண்டைய காலந்தொட்டு வாழ்ந்து வந்துள்ளனர். தற்போது சிங்களவர், இசுலாமியர்கள் (முஸ்லீம்கள்) குடியேறிய பிரதேசமாக விளங்குகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள ஓர் ஊரின் பெயராகவும், பெருங்குளத்தின் பெயராகவும் கந்தளாய் கிராமம் சிறப்புப் பெற்றுள்ளது. பாளி மொழி இலக்கியங்களில் “கங்க-தடாக” எனவும் சிங்கள மொழிச் சாசனங்களில் “கல்க-தளா” எனவும் இவ்வூர் குறிப்பிடப்பட்டுள்ளது. கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, திரிகோணாசல புராணம் ஆகிய நூல்களில் கந்தளாய்க்குளம் தொடர்பாக குளக்கோட்ட மகாராசன் மேற்கொண்ட பணிகள் பற்றி சிறப்பிக்கப்படுவதிலிருந்தும், இரண்டாம் கஜபாகு மன்னன் இவ்வூரிற்குப் புரிந்த திருப்பணிகள் பற்றிக் கூறும் சாசனங்களிலிருந்தும், கந்தளாயில் காணப்படும் சோழ இலங்கேசுவரன் காலத்துச் சாசனங்களில் வரும் வரலாற்றுத் தகவல்களிலிருந்தும் இத்தலவூரின் வரலாற்றுச் சிறப்பை அறிந்து கொள்ளலாம்.

### கந்தளாய் இராசேந்திரசோழீச்சரம்

தமிழகம் உட்பட இந்தியப் பெருங்கடல் எங்குமாக சோழப்பெருமன்னர்களின் ஆதிக்கம் செல்வாக்குப் பெற்ற கால கட்டத்தில் ஈழத்தைச் சோழர்கள் தங்கள் ஆதிக்கத்தினுள் கொண்டு வந்த போது, பொலநறுவை, திருகோணமலை,







கந்தளாய், பதவியா போன்ற இடங்களில் சோழர்கள் நிலைப்படுத்திய சைவக்கோயில்களும், வழிபாடுகளும், சமயப்பண்பாடுகளும்! விருத்திநிலை கண்டிருந்தன. அந்த வகையில் கந்தளாய் சிவன் கோயிலும் அக்கோயிலுடன் தொடர்புபட்ட சைவப் பண்பாட்டு அபிவிருத்திகள், சோழப்பெருமன்னர் காலத்தில் பெருவளர்ச்சி கண்டிருந்தது.

பொலநறுவைக் காலத்தில் சோழர்கள் பிராமணக் குடியிருப்புக்களை பல இடங்களில் ஏற்படுத்திக் கொடுத்தி ருந்தனர். அவை “பிரமதேயம்” என்ற பெயரால் அழைக்கப்பட்டிருந்தது. அத்தகைய பிரமதேயங்களில் “கந்தளாய் பிரமதேயம்” முதன்மை பெற்று விளங்கியது. சோழரின் ஆட்சியில் கந்தளாய், இராசேந்திர சோழ வளநாடு என்னும் பிரிவில் அடங்கியிருந்தது. ஆதலால் கந்தளாய் பிரம தேயம், இராசராச சதுர்வேதி (நான்மறை) மங்கலமாகப் பெயர் பெற்றது. இதைக் கந்தளாயில் கண்டறியப்பட்ட பழைய சாசனமொன்றில் இத்தகவல் “இராசேந்திர சோழ வள நாடான வித்தியாதர வளநாட்டுப் பிரமதேயம் இராசராச சதுர்வேதி(நான்மறை) மங்கலத்தைக் குறிப்பிடுகின்றது” என்று கூறப்பட்டுள்ளது. இச்சாசனம் 10 ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகவும் கணிக்கப்பட்டுள்ளது. அச்சாசனத்தின் ஒரு பகுதி பின்வருமாறு அமைந்துள்ளது.

> **“ஸ்வஸ்தி ஸ்ரீ கோ ஸ்ரீ சங்கவர்மரான உ
> டையார் ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கி
> யாண்ட்டு பத்தாவது ராஜேந்த்ர சோழ
> வளநாட்டு ராஜவிச்சாதிர வளநாட்டு
> ப்ரகமதேஸம் ஸ்ரீராஜராஜச் சதுர்வேதி
> மங்கலத்துப் பெருங்குறி பெருமக்க
> ளோம் இய்யாட்டைக் கும்ப நாயற்று பூர்வ
> பக்ஷத்து த் வாதஸியும் செவ்வாய்க் கிழ
> மையும் பெற்ற ஆயிலெயத்து நான்றிரவு
> நம்மூர் தண்டுகின்ற முத்தங்கை கோயில்
> மாணி!”**

இத்தகைய கற்தூண் சாசனத்தை முழுமையாக வாசித்தறிந்த பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள் ‘இலங்கையில் இந்து சமயம்’ என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

“கந்தளாயிலுள்ள சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்கள் சோழ இலங்கேஸ்வர தேவனின் 10 ஆவது ஆண்டிலே, மாசி மாதத்துப் பூர்வபட்சத்துத் துவாதசியான செவ்வாய்க்கிழமையும் ஆயிலிய நட்சத்திரமுங் சுடிய தினத்து இரவிலே கூடியிருந்து ஊர்த் தண்டுவானாகிய மானி தொடர்பாகவும், விக்கிரமசோழ வாய்க்காலின் இரண்டாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்திலுள்ள நீர் நிலம் 3 மா குறித்தும் ஏதோ முடிபுகளை மேற்கொண்டனர். கந்தளாயிலிருந்த சிவன் கோயில் மண்டபத்திலே அவர்கள் கூட்டமாகக் கூடினார்கள் என்றும், கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தைக் கோயிலிலிருந்த மண்டபமொன்றின் தூ ணிலே சிலாசாசனஞ் செய்தனரென்றும் அனுமானித்துக் கொள்ளலாம்”

ஆனால் தற்போது உள்ள சிவன் கோயில் கந்தளாயில் அமைந்துள்ளது. அது இன்று “இராசேந்திரசோழீச்சரம்” என்ற பெயரோடு அழைக்கப்பட்டு வருகின்றது. ஆனால் கட்டடம் சோழர்கள் அமைத்தவாறு இல்லை. முற்றுமுழுதாக தற்காலத்து சீமெந்துக் கட்டடமாக காட்சியளிக்கின்றது. இக்கோயிலின் ஒரு புறத்தில் சில கற்தூண்களும், சிதைந்த உருவச்சிலைகளும் காணப்படுகின்றன. ஏறத்தாள ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் சோழரின் ஆதரவோடு பொலிவுற்றுக் காணப்பட்ட இச்சிவன் கோயிலை, ஒருசில இன சமய விரோதிகள் மண்ணோடு மண்ணாக அழிந்துவிட்டதனால், கோயிலின் முழுமையான பாகங்களை யாரும் அறிந்து கொள்ள வாய்ப்பிருக்கவில்லை.

இருப்பினும் சிவபிரானின் அருளாற்றலினால் அங்கும் இங்குமாக சில தொல்பொருட் சின்னங்களும், சிதைந்த படிமங்களும் கிடைத்துள்ளன. 1950 இற்கும் 1977 இற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் இப்பிரதேசம் பல்வேறு இனத்தவர்களால் குடியேற்றத்திற்குட்பட்டபோது. சிவலிங்கங்கள், ஆவுடையார்கள். சிதிலமடைந்த சிவன், உமை திருவுருவங்கள், பின்னமடைந்த நந்தி, தூண்கள், ஆசனக்கற்கள், தேரோடிய மாதை நாயன்மார் ஒருவரின் வெண்கலச்சிலை, மணி ஆகிய எச்சங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. அவற்றுள் பெரும்பாலானவை சோழர் காலத்திற்குரியவை என்று ஆய்வாளர்கள் இனங்கண்டுள்ளனர்.

இத்தகைய திருக்கோயில் 1960 ஆம் வருடம் புனரமைப்புச் செய்யப்பட்டு, 1975 ஆம் வருடம் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழாவும் செய்யப்பட்டது. அதன் பின் நன்னீராட்டு விழா நினைவாக “சோழர் கால சோழீஸ்வரம் கந்தளாய் சதுர்வேத மங்களபுர சிவன் ஆலய கும்பாபிஷேக மலரும்” வெளியிடப்பட்டுள்ளது.

### விஜயராச ஈசுவரம்

தமிழகத்தில் சோழர் ஆட்சியிலிருந்த பிராமணர்கள் வாழ்ந்த பிரமதேயங்கள் சதுர்வேதி மங்கலம் (நான்மறை வேதங்களை கற்றுணர்ந்தோர் வாழும் ஊர்) என அழைக்கப்படுகின்றது. இது நான்மறைகளை ஓதும் பிராமணர்களுக்கு மன்னர்கள் நன்கொடையாக வழங்கிய ஊராகும். இலங்கையில் கந்தளாயில் சதுர்வேதி மங்கலமும் அங்கு சிவனுக்கு ஓர் கோயிலும் நிறுவப்பட்டிருந்தது. சோழரின் ஆட்சியில் இக்கோயில் ‘இராசராச ஈசுவரம்’ என்னும் பெயர் பெற்று வழங்கப்பட்டிருந்தது. சோழருக்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த சிங்களமன்னர் இங்கிருந்த பிராமணர் குடியிருப்பையும், அங்கிருந்த சிவன் கோயிலையும் மதித்துப் போற்றி, அவற்றின் வளர்ச்சிக்கும் உதவினார். இதற்கு ஆதாரமாக சிங்கள மொழியில் அமைந்த கற்சாசனங்கள் சான்று பகருகின்றன.

சோழரை வெற்றி கொண்டு ஆட்சிக்கு வந்த முதலாம் விஜயபாகு ஆட்சியில், இங்குள்ள சிவன் கோயில் “விஜயராச ஈசுவரம்” என்றும், பிராமணர்குடியிருப்பு “விஜயராச சதுர்வேதி மங்கலம்” என்றும் பெயர் பெற்று அழைக்கப்பட்டது. இதே பெயர் விஜயபாகுவின் பேரன்





கஜபாகு மன்னரின் காலத்திலும் தொடர்ந்தது. இவ்வாறான விபரங்களை கஜபாகு மன்னரின் காலத்தில் எழுதப்பெற்ற சாசனம் பின்வருமாறு தெரிவிக்கின்றது.

> **“ஸ்வஸ்தி ஸ்ரீ கோ அபய
> சலாமெக பர்ம்மரான சக்ர
> பத்தி ஸ்ரீ ஜயபாகு தேவற்கு யா
> ஆண்டு 35 ஆவது கந்தளாயான விஜ
> யராஜ சதுர்வேத மங்கரத்து ஸ்ரீ கை
> லாசமான விஜயராஜேஸ்வ முட
> யார்க்குத் திருப்பள்ளி யெழுச்சி மத்ய
> போநகம் அமுதுக்கு காசு இட்டார் பத்து”**

இக்கல்வெட்டில் கந்தளாயில் உள்ள சிவன் கோயில் பற்றியும். அங்கிருந்த சதுர்வேதிமங்கலம் பற்றியும் கோயில்வழிபாட்டோடு தொடர்புடைய திருப்பள்ளியெழுச்சி, திருப்போனகம் ஆகியவற்க்கு தானமாக காசு வழங்கிய செய்தியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விஜயபாகுவின் 42 ஆம் வருடத்தில் எழுதப் பெற்ற பளமோட்டைச் சாசனம், நங்கைசானி என்னும் விதவைப் பெண், இறந்து போன தன் கணவனாகிய யக்ஞீயகிரமவித்தன் பேரில் செய்த தானம் பற்றிக் குறிப்பிடுகின்றது. அவள் வழங்கிய தானங்கள் தென்கைலாசமான, விஜயராச ஈசுவரம் என்னும் சிவன் கோயிலோடு தொடர்புடையது என பேராசியர்.சி.பத்மநாதன் அவர்கள் ‘இலங்கையில் இந்துசமயம்’ என்ற நூலில் குறிப்பிடுகின்றார்.

“அவள் இச்சிவன் கோயிலுக்கு உடையாருக்குச் சூடுவதற்கென ஆறு கழஞ்சு பொன்முடியும். முக்கழஞ்சு பொன்மாலையும், திருநந்தா விளக்கொன்று பிரிப்பதற்கு அவள் ஒரு கழஞ்சு பொன் கொடுத்தாள். ஆலயத்தில் ஆராதனை வேளைகளிற் சேவை புரிவதற் கெனத் தேவரடியார் ஏழுபேரை நியமித்து ஆதரிப்பதற்கென 23 பொற்காசும் கொடுக்கப் பெற்றது ....” என கோயிலதிகாரிகளால் கோயிலின் மண்டபத் தூண் ஒன்றில் எழுதியும் வைத்துள்ளனர்.

கந்தளாயிலுள்ள நிஸங்கமல்லனின் கல்லாசனக் கல்வெட்டு அங்குள்ள பிரமதேயத்தைச் “சதுர்வேதிபிரம்மபுரம்” என சிறப்பிக்கின்றது. அங்கு அவன் “பார்வதி சத்திரம்” என்ற நிறுவனத்தை அமைப்பித்தான். அவன் கந்தளாயிக்கு போயியிருந்த சமயத்தில் அங்குள்ள கோயிலிலே திருவிழாக் காலத்தில் நிருத்தம் (பரதநாட்டியத்தின் ஒரு வகை), வாத்தியம் ஆகியவற்றைப் பார்த்து மகிழ்ந்தான் என்றும் கூறுகின்றது.

எனவே ஈழத்து இந்து சமயப் பண்பாட்டு வரலாற்றில் கந்தளாய் சிவன் கோயில் நீண்ட வரலாற்றுப் பண்பாடுகளைத் தன்னகத்தே கொண்டுள்ள திருக்கோயிலாகும். சோழ மன்னர்களின் ஆதரவும் பௌத்த மன்னர்களின் ஆதரவும் ஒருங்கே கிடைத்த சமயசமரசத்தின் ஆவண ஊற்றாகவும் இக்கோயில் சிறப்புப் பெற்று விளங்குகின்றது.

**“சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்”**
- திருப்புராணம்.

# தென்னாட்டு நிகழ்வுகள்



பரந்தன் இந்து மகா வித்தியாலயம் குடமுழுக்கு (20-02-22)








நிறைமதி வழிபாடும் தென்னாடு செய்தியிதழ் வெளியீடும்












பூநகரி மத்திய கல்லூரி குடமுழுக்கு (6-02-2022)



தேய்பிறை கழுவாய் வழிபாடு







வளர்பிறை கழுவாய் வழிபாடு

தென்னாடு செந்தமிழாகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் பதினேழாவது திங்கள் செய்தியிதழ் “தென்னாடு”, சிவத்திரு.சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு கும்பம் நல்லோரை மாசித் திங்கள் 17ம் நாள் பெருஞ்சிவனிரவு அன்று சிவனிரவு சிறப்பிதழாக (01-03-2022 செவ்வாய்க்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி , தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 221 2739 | புலனம் +94 75 653 3111 | மின்னஞ்சல் thennavan@thennadu.org | fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org